Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 03 வியாழக்கிழமை (18-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:22

## தலைமைப் பதவி இழுபறி: சங்கரி சட்ட நடவடிக்கை

# கூட்டணிச் செயற்குழுக் கூட்டத்தை ஞாயிறு நடத்த நீதிமன்றம் தடை!

## எதிர்வரும் 31ஆம் திகதி ஆஜராகுமாறு சம்பந்தன், ஜோசப் இருவருக்கும் பணிப்பு







கொழும்பு,டிசெம்பர் 18

**தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் இருந்துவரும் அதிகார இழுபறி நீதிமன்றம் வரை நேற்றுச் சென்றுவிட்டது. கூட்டணியின் தலைவரான வீ.ஆனந்தசங்கரியே அந்த இழுபறியை நீதிமன்றத்துக்கு எடுத்துச்சென்றிருக்கிறார். அவர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்த மனுவைப் பரிசீலனை செய்து நீதிமன்றம் எதிர்வரும் 21ஆம் திகதி திருக்கோவிலில் கூட்டத்திட்ட மிடப் பட்டிருக்கும் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் மீது இடைக்காலத் தடை விதித்திருக்கிறது.**

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி கூட்டணியின் மத்திய செயற்குழு எந்த ஒரு கூட்டத்தையும் கூட்டக கூடாதெனவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவிலில் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கூட்டப்படுவதை தடைசெய்யுமாறுகோரி வீ.ஆனந்தசங்கரி தாக்கல் செய்த மனு ஒன்றைப் பரிசீலனை செய்ததையடுத்தே கொழும்பு மாவட்ட நீதிபதி லலித் ஜயசூரிய இந்த இடைக்காலத் தடை உத்தரவைப்பிறப்பித்தார்.

இத்தடை உத்தரவு எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீடிக்கும் என்றும் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அன்று ஆஜராக வேண்டுமென்றும் நீதிமன்றம் அறிவித்தலும் விடுத்தது.

கூட்டணியின் செயலாளர் நாயகம் இராசம்பந்தன், பிரதித் தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. ஆகியோர் எதிர்

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி பொறுப்பேற்ற அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன

ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்ட மூன்று அமைச்சுக்கள் தொடர்பான நிதி ஒதுக்கீடுகள் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டன.

பாதுகாப்பு, உள்துறை அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் 125 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டன.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு ஆளும்கட்சியும், எதிர்க்கட்சிகளும் இணைந்து வாக்களிக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் எதிர்த்து வாக்களித்தது. தமிழ்க்கட்சியான ஈ.பி.டி.பி. ஆதரவாக வாக்களித்ததும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியினால் பறிக்கப்பட்ட - பிரச்சினைக்குரிய - மூன்று அமைச்சுகளுக்குமான நிதி ஒதுக்கீடுகளை ஆளும்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் இணைந்து ஏகமனதாக வாக்களித்து நிறைவேற்றினர். இவர்களுக்கு ஜே.வி.பியினரும், ஈ.பி.டி.பியினரும் ஆதரவு வழங்கினர். ஆனால், தமிழர் தேசியக் கூட்டமைப்பு தனித்து நின்று எதிர்த்து வாக்களித்தது.

ஜனாதிபதியினால் பறிக்கப்பட்ட பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை ஆகிய மூன்று அமைச்சுகளுக்குமான நிதி ஒதுக்கீடுகளை அரசு ஆதரிக்குமா, இல்லை கடைசி நேரத்தில் தோற்கடித்துவிடுமா என்ற சந்தேகம் இருந்துவந்தது.

ஆனால், பிரதமரின் பணிப்பின் பேரில் நீதி அமைச்சரும், சபை முதல்வருமான டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார, ஜனாதிபதியின் சார்பில் பதில் அளித்து விவாதம் தொடர்பான சந்தேகங்களுக்கு விடையளித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் மேற்குறிப்பிட்ட மூன்று அமைச்சுகளுக்குமான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதங்கள் இடம்பெற்றன.

பாதுகாப்புத்துறை தொடர்பான விவாதத்தை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வாவும், ஊடகத்துறை மீதான விவாதத்தை அனுர பிரியதர்ஷன யாப்பாவும், உள்துறை அமைச்சுக்கான விவாதத்தை முன்னாள் அமைச்சரான ஜோன் செனவிரத்னவும் ஆரம்பித்துப்பேசினர்.

வழமையாகவே ஜனாதிபதியின் செயற்பாடைக் கடுமையாக விமர்சனம் செய்து, கண்டனம் செய்துவரும் நீதி அமைச்சர் லொக்குபண்டார இந்த மூன்று விவாதங்களுக்கும் ஜனாதிபதியின் சார்பில் பதில் அளித்தார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## சங்கரி கலந்துகொள்ளவில்லை

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கலந்து கொள்ளவில்லை.

நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராகத் தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்கள் நேற்று வாக்களித்தனர். அப்போது சபையில் ஆனந்தசங்கரி இருக்கவில்லை. "சங்கரி எங்கே? சங்கரி எங்கே?" என்று ஜே.வி.பி உறுப்பினர்கள் சபையில் கூச்சலிட்டனர்.

கடந்த ஆண்டு பட்ஜட்டிலும் பாதுகாப்பு அமைச்சு நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பின் போது தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்கள் எதிர்த்து வாக்களித்தனர். அச்சமயமும் ஆனந்தசங்கரி வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'ரெலிகொம்' பரிவர்த்தனை நிலையம் கிளிநொச்சியில் நாளை திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.18

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் கிளிநொச்சியில் புதிதாக நிறுவப்பட்ட பரிவர்த்தனை நிலையம் நாளை வெள்ளிக்கிழமை முதல் இயங்கவுள்ளது.

இதுவரைகாலமும், யாழ்ப்பாணம் பரிவர்த்தனை நிலையம் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்துக்கு சுமார் 60 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன என்றும், புதிதாக நிறுவப்பட்டுள்ள பரிவர்த்தனை நிலையம் செயற்படத் தொடங்கியதும் நேரடியாக சுமார் 500 தொலைபேசி இணைப்புக்களை கிளிநொச்சிக்கு வழங்கக்கூடியதாக இருக்கும் என்றும் ரெலிகொம் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(எ-3)

## யாழ். கட்டளைத் தளபதியாக சுசில் சந்திரபால பதவியேற்பு

இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் எம்.டி.சுசில் சந்திரபால நேற்று உத்தியோகபூர்வமாக பதவியேற்றுக் கொண்டார்.

இவர் இப்பதவியை ஏற்கும்வரை வன்னிப் பகுதிக் கட்டளை தளபதியாகக் கடமையாற்றி வந்தார். யாழ். கட்டளைத்தளபதியாகப் பதவி வகித்து வந்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா அண்மையில் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து அந்த இடத்துக்கு சந்திரபால நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் சந்திரபால, 1992-1995 காலப்பகுதியில் மணலாறுப் பகுதியில் கடமையாற்றியவர். 1998நவம்பரில் மிருசுவிலில் அமைந்திருந்த 55ஆவது டிவிஷனில் இராணுவக் கட்டளை அதிகாரியாகவும் அவர் பணிபுரிந்திருந்தார்.

பின்னர் யாழ். மாவட்ட பிரதிக்

(18ஆம் பக்கம் பார்க்க)

## நெடுமாறன் உட்பட அறுவருக்கு 'பொடா' வழக்கில் இன்று பிணை?

'பொடா' சட்டத்தின் கீழ் சுமார் ஒன்றரையாண்டுகளாக விளக்கமறியலில வைக்கப்பட்டிருக்கும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் உட்பட அறு பிரமுகர்களுக்கு இன்று பிணை அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்களை பிணையில் விடக்கோரும் மனு மீதான விசாரணை சென்னை மேல் நீதிமன்றத்தில் நேற்றுப் பூர்த்தியானது. இன்று தீர்ப்பு வழங்கப்படவிருக்கின்றது.

வழக்கில் நேற்றைய கடைசி நாள விசாரணைப் போக்கு மற்றும் 'பொடா' சட்டம் தொடர்பாக புதுடில்லி உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வழங்கிய தீர்ப்பில் தெரிவிக்கப்பட்ட சட்டக கருத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு பிணை கிடைப்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது என்று அவர்களின் சட்டத்தரணிகள் கருத்துத் தெரிவித்தனர்.

பழ.நெடுமாறன், பேராசிரியர் சுபவீரபாண்டியன், டாக்டர் தாயப்பன், பாவாணன், சாகுல்ஹமீத், பரந்தாமன் ஆகியோர் தொடர்பான பிணை மனுக்களின் மீதே இன்று தீர்ப்பு வழங்கப்படவிருக்கின்றது.

(ஓ)



யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எம்.டி.சுசில் சந்திரபால பலாலி இராணுவத் தளத்தில் இராணுவத்தினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதையும், புதிய பணியை உத்தியோக பூர்வமாக ஆரம்பிப்பதையும் படங்களில் காணலாம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பாதுகாப்பு அமைச்சு நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் காட்டிய ஒற்றுமையை இனப்பிரச்சினைத் தீர்வில் காட்ட முடியாதா?

## பெரும்பான்மை இனக்கட்சிகளிடம் மாவை எம்.பி. கேள்வி



கொழும்பு,டிசெ.18

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பில் ஜே.வி.பி உட்பட அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து வாக்களிக்க முடியுமென்றால், நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு அனைத்துக் கட்சிகளும் இணைந்து ஏன் தீர்வு காணமுடியாது? தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று நாடாளுமன்றத்தில் இப்படிக் கேள்வி எழுப்பினார்.

உள்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

இனப்பிரச்சினை பூதாகரமாக உருவெடுத்து இந்நாட்டில் யுத்தம் நடைபெறுவதற்குப் பொலிஸாரும் காரணமானவர்கள்.

இரண்டு தசாப்தங்களாக நடைபெற்று வந்த யுத்தம் நிறுத்தப்பட்டு, தீர்வுக்கான பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்று சமூக நிலைமையைக் குழப்பியடித்து விட்டார். சமாதானப் பேச்சுக்கு பாதுகாப்பு அமைச்சு முக்கியமானது. சமாதான நடவடிக்கைகள் குறித்துப் பிரசாரம் மேற்கொள்ள மக்கள் தொடர்பாடல் அமைச்சு முக்கியமானது.

13ஆவது அமைப்புத் திருத்தப்படி ஒவ்வொரு மாகாணத்துக்கும் பொலிஸ் திணைக்களம் தனியாக நிறுவப்பட வேண்டும். ஆனால், அவ்வாறு இங்கு இதுவரை நிறுவப்படவில்லை. பொலிஸ் நிலையங்களில் தமிழில் வாக்குமூலங்களைப் பதிவு செய்ய முடியாதநிலை இருக்கின்றது. இதன் காரணமாக மொழிபெயர்க்கப்பட்ட வாக்குமூலங்கள் நீதிமன்றங்களில் முன்வைக்கப்படுகையில் தீர்ப்புகளே மாறும்நிலை ஏற்பட்டிருக்கிறது.

நானும் பொலிஸ் தலைமையக நான்காம் மாடியில் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளேன். அந்த வகையில் நான் பொலிஸாரைக் குறை கூற விரும்பவில்லை. நாட்டை ஆட்சி செய்த அரசுகளின் ஆணைப்படியே இத் தடுத்து வைப்புக்கள் இடம்பெற்றன.

இத்தேசம் முழுவதையும் ஆளவேண்டுமென நாம் கேட்கவில்லை. முழு நாட்டையும் ஆளவேண்டுமென புலிகளும் கேட்கவில்லை. எங்கள் பாரம்பரிய பிரதேசமான வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தன்னாட்சி புரியவே நாம அனுமதி கோருகிறோம்.

தமிழீழ காவல் துறையின் பொலிஸ் மா அதிபர் நடேசன் சமீபத்தில் தொலைக்காட்சியொன்றுக்கு செவ்வியளித்திருந்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் சிறப்பான முறையில் பொலிஸ் நிலையங்கள் இயங்குகின்றன என்றும் - தமது பகுதிகளில் குற்றச் செயல்கள் மிகவும் குறைந்துவிட்டன என்றும்- அந்த செவ்வியில் அவர் தெரிவித்தார்.

ஒரு சிங்களப் பெண்ணைத் தான் திருமணம் செய்து கொண்டார் என்றும் - 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனவன்முறையில் தமிழரான காரணத்தால் பொலிஸ் துறையிலேயே தான் பெற்ற அனுபவங்களைப் பற்றியும் அவர் அந்தச் செவ்வியில் நினைவு கூர்ந்தார்.

இப்போது அவர் உலகுக்கே எடுத்துக்காட்டான ஒரு அமைப்பை முன்னுதாரணமாக வழிநடத்திக்காட்டுகிறார்.

ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு கிட்டப் போவதில்லை. வடக்கு - கிழக்கில் தன்னாட்சி அதிகாரம் வழங்கினால் மாத்திரமே அது சாத்தியம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஓ)





நேற்று யாழ். வந்த கிழக்குப் பத்திரிகையாளர்கள் உதயன் பணிமனைக்கு விஜயம் செய்தனர். குடாநாட்டின் தற்போதைய நிலை குறித்து உதயன் ஆசிரியர் பீடத்தினருடன் அவர்கள் கலந்துரையாடினர். அந்தச் சமயத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# கிழக்குப் பத்திரிகையாளர்கள் வடக்கு நிலைமை அறிய வருகை

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ். குடாநாட்டின் நிலைவரத்தை நேரில் கண்டறிவதற்கென கிழக்கிலங்கையைச் சேர்ந்த 30 பத்திரிகையாளர்கள் நேற்று யாழ். வந்தனர். கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் இப்பயணத்துக்கான ஏற்பாட்டை செய்துள்ளது.

இன்று காலை யாழ். பல்கலைக் கழகம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களுக்கு விஜயம் செய்யும் இவர்கள், அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து நிலைமைகளை அறிந்துகொள்வர்.

இன்றிரவு யாழ். முஸ்லிம் பள்ளிவாசலுக்குச் செல்லும் இவர்கள், அங்கு முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவர். நாளை வெள்ளிக்கிழமை காலை கிளிநொச்சி செல்லும் பத்திரிகையாளர் குழுவினர் விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பராவையும் -

நாளைமறுதினம் சனிக்கிழமை இரவு அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்தித்துப் பேசுவர். (எ)

## ரஷ்யப் பயணத்தின்போது காலமான

# சோம தேரரின் மரணம் குறித்து பொலிஸ் விசாரணைக்கு உத்தரவு

ரஷ்யாவில் காலமான வண. கங்கொடவில சோம தேரரின் மரணம் குறித்து பொலிஸ் விசாரணை நடைபெறவிருக்கிறது. அவரது மரணம் மர்மமானதெனக் கூறி, விசாரணை நடத்தப்பட வேண்டுமென பல தரப்புகளினால் ஜனாதிபதியும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இதையடுத்து, அவரது மரணம் குறித்து விசாரணை நடைபெற பதில் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

மரணவிசாரணை நடைபெறவும் அதற்கென நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறவும் ஏற்பாடுகளைச் செய்யுமாறு கொழும்பு பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத்துக்கு பதில் பொலிஸ்மா அதிபர் ஆலோசனை வழங்கினார்.

விசாரணை நடத்தப்பட விடுக்கப்பட்ட கோரிக்கைகளை கவனத்தில் கொண்ட ஜனாதிபதி, மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு பிரேதப் பரிசோதனை நடத்தப்படாமலே பூதவுடலை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவித்திருந்தார். பூதவுடல் இன்று இலங்கைக்கு எடுத்து வரப்பட்டதும் மரண விசாரணை நடைபெறுமெனத் தெரிகிறது.

கங்கொடவில சோம தேரரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 21ஆம் திகதி மாலை கொழும்பு ஹெவ்லொக் ஹென்றி பேரிதிஸ் மைதானத்தில் நடைபெறும். (ஓ)

# நாளைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.18

சுகவாழ்வு சிறுவர் கழகங்கள் நடத்தும் மாபெரும் பொருட்காட்சியும், விற்பனையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வட-கிழக்கு உதவி பிரதேச செயலர் இராசதுரை கலந்துகொள்வார். (எ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.18

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில், நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில உள்ள நாவலர் மணி மண்டபத்தில் 'நாவலரின் சமயப்பணி' என்ற தலைப்பில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் கந்த சத்தியதாசனும் - 'நாவலர் தமிழ்ப்பணி' என்ற தலைப்பில் சைவப்புலவர் நித்திய தசீதரனும், சொற்பொழிவாற்றுவர். (எ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,டிசெ.18

முன்னேஸ்வரம் ஸ்ரீ முன்னை நாதசுவாமி, நல்லூர் சிவன் பக்திக் கீர்த்தனைகள் ஒலிப்பேழை வெளியீட்டு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைககழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் நயப்புரையினை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும் நிகழ்த்துவர். (எ-7)

# ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவைக்கு பணிப்பாளர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை

## விசாரணைக்குழு நியமிக்க சிவாஜிலிங்கம் கோரிக்கை

கொழும்பு,டிசெ.18

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவையின் பெயரை முஸ்லிம் சேவையென மாற்ற வேண்டும் ஏனெனில், முஸ்லிம் சேவைக்குப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால், தமிழ்ச் சேவைக்கு பணிப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை. இது குறித்து விசாரணை நடத்த ஜனாதிபதி குழுவொன்றை அமைக்க வேண்டும்.

கூட்டமைப்பு எம்.பி. கே.சிவாஜிலிங்கம் நேற்று நாடாளுமன்றத்தில் பேசும்போது இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் அதிகாரிகள், ஊழியர்களுக்கு எதிராகப் பல சதிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதேவகையில் அரசாங்க அச்சகத்துக்குப் பெருந்தொகையான முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசாங்க அச்சகத்திலும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச்சேவையின் பணிப்பாளராக இளையதம்பி தயானந்தாவை நியமிக்கும்படி அங்குள்ள முஸ்லிம்கள் உட்பட தமிழ் அதிகாரிகள் கைச்சாத்திட்டு மகஜர் கையளித்துள்ளனர். இருப்பினும், இன்றுவரை நியமனம் வழங்கப்படவில்லை. இதன் நோக்கம் என்னவென்று கேட்க விரும்புகின்றேன்.

இந்த நாடாளுமன்றத்தின் சரித்திரத்தில் முதல் முறையாக ஆளும் கட்சி எதிர்க்கட்சியாகவும் எதிர்க் கட்சி ஆளும்கட்சியாகவும் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவது வேடிக்கையாகவுள்ளது.

- இவ்வாறு அவர் சொன்னார்.

### வீடியோப்படக் காட்சி

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில், வசந்த ஒபயசேகரவின் 'தீர்த்த யாத்ரா' என்ற சிங்களத்திரைப்படம் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

இத் திரைப்படத்துடன் தமிழ் எழுத்தாளரான அசோகமித்திரனைப் பற்றி அம்ஷன்குமார் உருவாக்கிய விவரணப்படம் காண்பிக்கப்படும். இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசா தலைமையில் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும்.

ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# மாகாண சபைத் தேர்தல்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தயாராகிறது!

## தே.ஐ.மு., அதாவுல்லா அணி ஆகியவற்றுடன் பேச ஏற்பாடு

கொழும்பு,டிசெ.18

மாகாண சபைத் தேர்தல்கள் அடுத்த வருட முற்பகுதியில் இடம்பெறும் என நிச்சயமாக எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாகாண சபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிட வேண்டுமென்று உயர்மட்ட அழுத்தங்கள் கட்சிக்குள் எழுந்துள்ளதாக கட்சியின் மஜ்லிஸ் அல்ஷூரா தலைவர் அஷ்ஷெய்க் இனாமுல்லாஹ் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் உயர்பீடக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை கட்சியின் தேசியத் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கொழும்பில் கூடிய போதே இவ்வாறு வலியுறுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில கூறியதாவது:-

கட்சியின் தேசிய அமைப்பாளர்கள், உயர்மட்ட உறுப்பினர்களுக்கு உடனடியாக தேர்தல்களுக்கு முகம் கொடுக்கத் தயாராகுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகள் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல்களைக் கருத்திற்கொண்டு மாகாணசபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிட்டு கட்சியின் ஸ்திரத்தன்மையை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள வேண்டுமென அரசியல் உயர்பீடம் தலைமைத்துவத்தை வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு, கிழக்கு மாகாணத்தில ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்றுள்ள அதிருப்தியாளர்களுடன் பேச்சு நடத்தி முஸ்லிம்களது அரசியல் பலத்தை ஒருமுகப்படுத்தும் நோக்கில் தேசிய ஐக்கிய முன்னணியுடன் பேச்சு நடத்த மூவர் அடங்கிய உயர்மட்ட குழுவொன்றும் அதாவுல்லாஹ் அணியினருடன் பேச்சு நடத்துவதற்கு மற்றொரு உயர்மட்ட குழுவும் அரசியல் உயர்பீடத்தினால் நியமிக்கப்பட்டுள்ளது.


தேசிய ஐக்கிய முன்னணியுடன் பேச்சு நடத்த கட்சியின் பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்எம்.எம்.ஹரீஸ், தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ், மஜ்லிஸ் அல்ஷூரா தலைவர் ஷெய்க் இனாமுல்லாஹ் ஆகியோரும் அதாவுல்லாஹ் அணியினருடன் பேச்சு நடத்த கட்சியின் பிரதிநிதித்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.அன்வர் இஸ்மாயில், பிரதித்தலைவர் சட்டத்தரணி என்.எம்.சஹீட், மஜ்லிஸ் அல் ஷூரா உபதலைவர் மௌலவி ஏ.எல். எம்கலீல் ஆகியோரும் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஒரே அணியாகவோ அல்லது கூட்டணியாகவோ போட்டியிடுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றியும் அரசியல் உயர்பீடக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் மஜ்லிஸ் அல் ஷூரா தலைவர் அஷ் ஷெய்க் இனாமுல்லாஹ் தெரிவித்துள்ளார். (ஓ)

# பக்தாத்தில் மீண்டும் சக்திவாய்ந்த குண்டு வெடிப்பு: 17 பேர் உயிரிழப்பு! அதிர்ச்சியில் அமெரிக்கப்படை!!

பக்தாத்,டிசெ.18

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் கைதுசெய்யப்பட்டதையடுத்து தலைநகர் பக்தாத்தில் நேற்று சக்திவாய்ந்த குண்டுவெடித்தது. இதில் 17 பேர் கொல்லப்பட்டனர்; 15இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். சதாம கைதுசெய்யப்பட்ட பின்னர் கெரிலாக்களின் தாக்குதல்கள் குறையும் என்று எதிர்பார்த்த அமெரிக்கப்படை இந்தத் தாக்குதலால் அதிர்ச்சியடைந்துள்ளது.



ஈராக்கில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் கரும்புகை மண்டலத்தின் நடுவே பற்றி எரியும் எண்ணெய் பவுசர் மற்றும் மினிபஸ்.

பக்தாத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ள அல்பையா மாவட்டத்தில் நேற்றுக்காலை இந்தக் குண்டுத் தாக்குதல் நடந்தது.

எண்ணெய் பவுசர் ஒன்றினுள் குண்டுகள் நிரப்பப்பட்டு இத்தாக்குதல் நடந்ததாக ஈராக்கியப் பொலீஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியில் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்றும் இந்த குண்டுத் தாக்குதலில் சிக்கி சுக்குநூறாகியது.

வீதியோரமாக வைக்கப்பட்டிருந்த குண்டொன்றே வெடித்தது என்று பிறிதொரு தகவலில் கூறப்பட்டுள்ளது. ஆனால், இதனை அமெரிக்கப் படையினர் மறுத்தனர். எண்ணெய் பவுசரில நிரப்பப்பட்ட குண்டுகளே வெடித்தன என்று அவர்கள் கூறுகின்றனர்.

கொல்லப்பட்ட அனைவரும் சிவிலியன்கள் என்று இடைக்கால நிர்வாக ஆட்சிக்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். இதனை பக்தாத் வைத்தியசாலையும் உறுதி செய்தது.

குண்டுவெடித்த இடத்தில் அமெரிக்கக் கூட்டுப்படையின் முகாம்களோ அல்லது ஈராக்கியப் படையினரின் நிலைகளோ இல்லை. எனவே, இது பயங்கரவாதச் செயல் என்று பக்தாத் நகர பொலீஸ் தலைமை அதிகாரி ஹமீத் சபா பாஹேத் தெரிவித்தார்.

இப்பகுதியில் கடந்த இரண்டு நாள்களாக சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்டதற்கு ஆதரவு தெரிவித்து கொண்டாட்டங்கள் நடைபெற்றுவந்தன. இதனால், ஆத்திரமடைந்த சதாமின் ஆதரவாளர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலால் அமெரிக்கப் படை அதிர்ச்சியடைந்துள்ளது. சதாம் கைதுசெய்யப்பட்ட பின்னரும் வழமைபோன்று தாக்குதல்கள் தொடரும் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது என்று பக்தாத்திலுள்ள அமெரிக்கப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குண்டுத் தாக்குதல் நடந்த இடத்தை அமெரிக்கப்படை சுற்றி வளைத்துள்ளது.

அதேநேரம் சதாம் கைதுசெய்யப்பட்ட பின்னர் வன்முறைகள் அதிகரித்துள்ளன என்றும் சதாமின் ஆதரவாளர்கள் அமெரிக்கப் படையினரால் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்றும் செய்திகள் கூறுகின்றன.

சதாம் கைது செய்யப்பட்ட பின்னர் இதுவரை எண்பதுக்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் சதாமின் கைதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு நாள்களில் ஈராக்கிய கெரில்லாக்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களின் கெரில்லாக்களின் தளபதிகள் சிலரும் அடங்குகின்றனர் என்றும் அங்குள்ள அமெரிக்கப்படை தெரிவித்துள்ளது. (ஏ)

## "அகப்பட்டாலும் என் தந்தை சிங்கம்தான்" சதாம் ஹுசைனின் மூத்த புதல்வி பெருமிதம்

"அகப்பட்டாலும் என் தந்தை சிங்கம்தான். அவர் சுய நினைவுடன் இருந்திருந்தால் தொலைக்காட்சியில் காட்டும் போது அவ்வாறு நடந்திருக்கமாட்டார். அவரைப் பிடிப்பதற்காக மயக்கும் புகைக்குண்டு வீசப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் அவர் போதைவஸ்த்து ஊட்டப்பட்ட நிலையில் தடுமாற வைக்கப்பட்டிருக்கிறார். இன்று உலகம் பார்த்த சதாம் போதை ஊட்டப்பட்ட, நிதானமிழந்த சதாம்தான்"

- இவ்வாறு சதாமின் மூத்த புதல்வி ராகா, கட்டாரில் இருந்து செயற்படும் அல்-அராபியா தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

பேட்டியில் அவர் மேலும் கூறுகையில் - நிதானம் இழந்ததன் காரணமாகவே எனது தந்தை தொலைக்காட்சியில் காட்டும் போது அவ்வாறு நடந்துகொண்டார்.

சர்வதேச நீதிமன்றமே அவரிடம் விசாரணையை நடத்தவேண்டும். ஈராக்கிய இடைக்கால நிர்வாகம் அவரிடம் விசாரணை நடத்த அனுமதிக்கக் கூடாது. எனது தந்தைக்காக வாதாட சட்டத்தரணி ஒருவரை நானே நியமிக்கவுள்ளேன் - என்றார்.

சதாமின் சகோதரியும் நேற்று முன்தினம் சதாமின் கைது குறித்து பேட்டியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சதாமை விசாரணைக்காக [illegible] பொழுதே ஈராக்கிய அரசிடம் [illegible] டைத்தால் பல சிரமங்கள் ஏற்ப[illegible] என்று கூறப்படுகிறது. இதனா[illegible] சி.ஐ.ஏயிடம் சதாமை விசாரிக்[illegible] பொறுப்பை அமெரிக்க நிர்வா[illegible] ஒப்படைத்துள்ளது.

ஆனால், சதாம் ஹுசைன் தனது தரப்பு கருத்துக்களை எடுத்துரைக்க சர்வதேச மேடை அமைத்துக்கொடுப்பது நயவஞ்சகமான செயல் என்று ஈராக்கிய இடைக்கால அரசு கூறியுள்ளது.

## தாக்குதல்களை வழி நடத்துபவர் யார்? சதாமுக்குக் கூட அவரைத் தெரியாதாம்!

ஈராக்கில் உள்ள அமெரிக்கப்படையினர் மீது நாளாந்தம் நடந்துவரும் கெரில்லாத் தாக்குதல்கள் குறித்து சதாம் ஹுசைனுக்கு எதுவும் தெரியவில்லை என்று 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களுக்குப் பின்னால் இருக்கும் சூத்திரதாரி யார் என்று சதாமிடம் வினவப்பட்டது. அதற்கு அவர், தாக்குதல்கள் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று பதிலளித்துள்ளார். அத்துடன்,பேரழிவு ஆயுதம் எதுவும் ஈராக்கில் இல்லை என்று அவர் தொடர்ந்து மறுத்துவருகிறார்.

சதாம் தற்போது சோர்வுடன் காணப்படுவதால் அவரிடம் விசாரணை நடத்துவது பலனளிக்கப்போவதில்லை என்று அமெரிக்கப்படை அதிகாரிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இதனால், சதாம் யதார்த்தமாகப் பேசும்வரை அவரிடம் விசாரணை நடத்துவதில் எதுவித பிரயோசனமும் இல்லை என்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

அமெரிக்கப்படை அதிகாரிகள் சிலர் சதாமிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். அரபி, ஆங்கிலம் ஆகிய மொழிபெயர்ப்பாளர்களின் உதவியுடன் இந்த விசாரணை நடந்து வருகிறது. (ஐ)

## அமெரிக்காவுக்கு எதிரான தாக்குதல்கள் தொடரும்!

### இந்தோனேசியத் தீவிரவாதி எச்சரிக்கை

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்டமை ஒரு பொருட்டே அல்ல. அமெரிக்காவுக்கு எதிரான தாக்குதலை தீவிரவாதிகள் தொடர்ந்து மேற்கொள்வார்கள் என்று இந்தோனேஷியத் தீவிரவாதி தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியாவின் பாலிதீவில் 2002 ஒக்ரோபர் 12 இல் நடந்த குண்டுவெடிப்பில் 202 பேர் இறந்தனர். இந்த வழக்கில் மரணதண்டனை பெற்ற மூவரில் இவரும் ஒருவர். இவரது பெயர் அலி கப்ரான்.

பாலிதீவில் உள்ள நீதிமன்றத்தில் நிருபர்களிடம் திங்கட்கிழமை பேசுகையில் -

"1001 சதாம் ஹுசைன்களைக் கூடக் கைது செய்யட்டும். அதற்கெல்லாம அஞ்சமாட்டோம். எங்கள் போராட்டம் நீடிக்கும். கடவுள் விரும்பினால் அமெரிக்காவுக்கு எதிரான போராட்டத்தைப் போராளிகள் தொடர்வார்கள்"

- என்று அவர் தெரிவித்தார். நீதிமன்றம் வந்த போது அவர் மேற்கத்திய நாடுகளுக்கு எதிராகக் கோஷம் எழுப்பினார். (ஐ)

## சதாமைத் தீர்த்துக் கட்ட இஸ்ரேல் திட்டம் தீட்டியதாம்!

ஜெருசலேம்,டிசெ.18

வளைகுடாப் போரின் போது இஸ்ரேல் மீது ஈராக் நடத்திய ஏவுகணைத் தாக்குதலுக்குப் பதிலடியாக சதாமைத் தீர்த்துக்கட்ட இஸ்ரேல் திட்டமிட்டிருந்தமை தற்போது தெரியவந்துள்ளது.

இதனை இஸ்ரேலிய அரசே நேற்றுமுன்தினம் பகிரங்கமாக அறிவித்தது.

"சதாம் ஹுசைனைக் கொல்வதற்கு இஸ்ரேல் திட்டமிட்டது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றவென ஐந்து கொமாண்டோக்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால், ஈராக் சென்ற அவர்கள் மீளவும் திரும்பவில்லை.

இவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை எதுவிதத் தகவலும் தெரியவரவில்லை. ஈராக்கில் காணாமற்போன இவர்களை, இதுவரை காலமும் சதாம் ஹுசைன் உயிரோடு வைத்திருக்கமாட்டார். இவர்கள் கொல்லப்பட்டிருப்பார்கள். அதனால், சதாமைக் கொல்லும் எமது திட்டம் தோல்வியில் முடிந்தது."

- என்று இஸ்ரேலிய அரசின் சார்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சதாம் பிடிபடாமல் இருக்கும்வரை அவரைக் கொல்லும் திட்டத்தை வெளியிட முடியாது என்பதால் அதனை இதுவரை காலமும் மறைத்துவைத்திருந்த இஸ்ரேல், இப்போது அதனை பகிரங்கமாக அறிவித்துள்ளது.

சதாம் தனது மாமனின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளும் போதே அவரைக் கொன்றுவிட இஸ்ரேல் திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



பழுது பார்த்தல்

1975 ஆம் ஆண்டில் இருந்து 25 வருடங்களுக்கு மேலாக, அனுபவமிக்க, விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்.

திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன், அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு, ஒரே நாளில் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை,

ஒரு வருட உத்தரவாதம்!

கெமரா பழுது பார்த்தல்



மின்சார உபகரணங்கள் பழுது பார்த்தல்



டிஜிட்டல், ஸ்டில் & வீடியோ கெமரா, லென்சஸ், ஸூம் கெமரா பிளேக்ஸ் சேர்கியூற், றீபிளேஸ்மன்ட்ஸ், ஸ்டுடியோ பிளாஷஸ், கொம்பியுடரைஸ்ட், ஃபிளாஷ் கன்ஸ்ஹை-பை எம்பிலிபையர்ஸ், சற்டலைட்ஸ்,

LD, CD, VCD, DVD கெசட்ஸ், CD இயந்திரங்களை VCD யாக மாற்றுதல்

செலுலர் தொலைபேசிகள், பெக்ஸ்மெசின்கள், கோட்லெஸ், அனலொக் தொலைபேசிகள், இலக்றோனிக் டைப்ரைட்டர்கள்,மைக்றோவேவ்ஸ் ஓவன், பொலிஷர், ப்ளென்டர், மின்சார விசிறிகள், சலவை இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மோட்டார்கள்.

GRAYON

DURST ELECTRONICS (PVT) LTD.

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. போன்: 2575480, 2565756

P.G. மாட்டினுக்கு எதிரிலும், ரேனுகா ஹோட்டலுக்கு அருகிலும் (கடல் பக்கம்)

# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**A/L 2006**

கணித உயிரியல் பிரிவு

(எமது வழமையான ஆசிரியர் குழு)

ஆரம்பம்: 28-12-2003

குறிப்பு: *24-12-2003 இலிருந்து அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.* (25981) (28-21-12-18)

---

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி

# விண்ணப்பம் கோரல

**2004ஆம் ஆண்டு தை மாதத்தில் ஆரம்பமாக இருக்கும் கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரண பிரிவுப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினை ரூபா 10 செலுத்தி கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.**

அதிபர்,
கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி,
51, கடற்கரை வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

**- அதிபர்.**

(C/32002)

---

சுகவாழ்வு சிறுவர் கழகங்களின்

# மாபெரும் பொருட்காட்சியும் விற்பனையும்

காலம்: **19.12.2003**

நேரம் : காலை 9.30மணி - மாலை 5.00 மணி வரை

இடம் : **யா/மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலை**

பிரதம விருந்தினர் : திரு.கந்தையா இராசதுரை

*(உதவிப் பிரதேச செயலர், வலி. கிழக்கு, கோப்பாய்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

பணிப்பாளர்: பிதா ஆ.டேமியன் (அ.ம.தி)
இணைப்பாளர், நிர்வாகக் குழுவினர்,
உளவளத்துணையாளர்கள்,
கழகச்சிறார்கள்.

சுகவாழ்வு நிலையம்
18, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(25974)(18-21-12-18)

---

## சனசமூக நிலையம் திறப்பு

கைதடி நாவற்குழி தெற்கில் 'அமடா' (Amda) நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட ஸ்ரீ மகா விஷ்ணு சனசமூக நிலையத்தின் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக 'அமடா' நிறுவனத்தின் திட்ட இயக்குநர் செல்வி லீ பொஷ்மி, திட்ட இணைப்பாளர் ஹிறோயுகி ஒக்காஷாக்கி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் என்.பாலச்சந்திரன், மீள்குடியேற்றத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.ஜெ. போஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேற்படி நிறுவனத்தினால் சனசமூக நிலையத்தின் பாவனைக்கென 2 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

---

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி பாலசிங்கம்

21, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாலசிங்கம் அவர்கள் 15.12.2003 திங்களன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - விசாலாட்சி தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் அன்னமுத்து அவர்களின் அருமைக் கணவரும் தவமணி (சுவிஸ்), சசிகலா (சுவிஸ்), புவனசுந்தரி (யாழ்ப்பாணம்), உதயகுமார்(ஜேர்மனி), மிருணாளினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நவராசா (சுவிஸ்), சங்கரப்பிள்ளை (சுவிஸ்), பஞ்சாட்சரம் (பிரான்ஸ்), ஜெயராசா (லண்டன்), றோகினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி சுகன்யா ரஞ்சித்குமார், கார்த்திகா, சோபிகா, நிருஷா, நிஷாந், நிரஞ்சனா, நிவேதா, சாமந்தி, சிந்துஜா, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் திருமதி மங்களம் நடராசா, திருமதி ஜோதி சின்னத்துரை, காலஞ்சென்றவர்களான காளிதாசன், திலகவதி லோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2003) வியாழக்கிழமை பி.ப.3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

21,பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (25988)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

---

# இலவச கணனிக் கருத்தரங்கு

கணனி விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும்

காலம் 26/12/2003 - 31/12/2003 (9.00 AM to 4.00 PM)

யாருக்கு
- பாடசாலை மாணவர்கள் (O/L & A/L)
- அரச தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள்
- பெற்றோர்கள்.

கணனிப் பட்டதாரிகளடங்கிய அனுபவம் மிக்க விரிவுரையாளர்களின் இணைந்த சேவையின் கீழ் 6 நாட்கள் நீங்கள்.

உள்ளடக்கம்
- Computer Systems & Systems Engineering
- Information Technology
- Computer Applications (Including MS Office)
- e-mail & Internet Technology
- Computer Programming (VB, C++/ Java)
- Database Management
- Data Communicatio and Networking

கருத்தரங்கினூடான புலமைப்பரிசில்கள்

இப்பயிற்சி முடிவில் நடாத்தப்படும் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு எமது பாடநெறிகளில் புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

**இன்றே உங்கள் அனுமதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்**

பதிவுகளிற்கு

73, Palaly Road, Kantharmadam.
Branch: Sankaththanai, Chavakachcheri


STP *Your Partner in IT Solution* T.P:2222674

---

# ஆரோக்கியம்மிக்க இலங்கைக்கான புதியதோர் தரிசனம்

**பின்வரும் நோய்களுக்கான மருந்துகள் எம்மிடம் உள்ளன.**

* நோயெதிர்ப்பு சக்தி குறைவு நோய்கள், வைரஸ் நோய்கள்
* நிக்கொட்டின் தடைகள், ஈரல் நோய்கள்.
* மூளை வளர்ச்சிக்குறை, காக்கை நோய்கள்.
* நாடி இரத்தக் குழாய்களில் அடைப்புக்கள்.
* ஒற்றைத் தலைவலி
* மூட்டுவாதம்
* படுக்கைப் புண்கள் மற்றும் புரொஸ்ரேற் நோய்கள்.



**மாற்ற முடியாதவை என அழைக்கப்படும் நோய்கள்**

* நீங்கள் நோயெதிர்ப்பு சக்திக் குறைவை ஏற்படுத்தும் உயிர் கொல்லி வைரஸ் நோயினால் அவதிப்படுகிறீர்களா?
* உங்களுக்கு இருதய நோய்க்காக விலை உயர்ந்த சிகிச்சை முறைக்கு ஆலோசனை தரப்பட்டுள்ளதா?
* நிக்கொட்டின் தடைகாரணமாக உங்கள் கை, கால்களை அகற்ற வேண்டுமென ஆலோசனை கூறப்பட்டுள்ளதா?
* மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளைகள் சாதாரண அறிவுத் திறனுக்கு வளர்த்தெடுக்கப்பட முடியாதவர்கள் என சொல்லப்பட்டுள்ளதா?
* ஒற்றைத் தலைவலி அல்லது சயரோகம் முற்றாகக் குணமாக்க முடியாதது என சொல்லப்பட்டுள்ளதா?
* நீரிழிவுப் புண்களால் அல்லது மாறாத காயங்களால் அவதிப்படுகிறீர்களா? [அவயவ அகற்றலைத் தடுக்க]
* நீண்ட நாட்கள் படுக்கையிலிருக்கும் உங்கள் உறவினர் படுக்கைப் புண்ணால் அவதிப்படுகிறாரா?
* வயது முதிர்ந்த உங்கள் உறவினர் அல்சிமேர்ஸ் வியாதியால் அவதிப்படுகின்றாரா?
* இதய வால்வு நோயினால் அவதிப்படுகிறீர்களா?
* புரொஸ்ரேற் சுரப்பி வீக்கத்திற்காக சத்திரசிகிச்சை செய்ய உள்ளீர்களா?
* யானைக்கால் நோயேற்பட்ட காலில் அவலம் வழிய ஆரம்பித்துள்ளதா?

எமது அலுவலகத்திலோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்

இன்று முதல் உதயமாகிறது

# பெயார் பார்மா

(FAIR PHARMA)

ஆயுள்வேத மருத்துவப் பொருட்கள்.

**கௌரவ. பி. தயாரட்ன**

சுகாதார, போசாக்கு, சேமநல அமைச்சர்

அவருடன்

**கௌரவ. சரச்சந்திர ராஜகருண**

சுதேசிய மருத்துவ அமைச்சர்.

அவர்களினால்

ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

**FAIR PHARMA (PVT) LTD** L5/ET/1C, WORLD TRADE CENTRE, COLOMBO - 01

Phone : 0094-11-5517897, 5551879. Fax : 0094-11-5517756 E-mail : fppvtl@lankabellnet.com Website:

கொலஸ்ரோல், இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை நீக்குகிறது

## உதயன்

# இந்தியப் போக்கில் மாற்றம் தேவை

"இந்தியாவின் நலன்களுக்கு எதிராக ஒரு போதும் செயற்படமாட்டோம் என்று விடுதலைப் புலிகள் உறுதியளித்துள்ளனர். அதேபோன்று புலிகளுக்குப் பக்கபலமாக இருக்கும் தமிழ்மக்களின் நலன்களுக்கு எதிராகச் செயற்படுவதில்லை என்று இந்தியாவும் உறுதிமொழி வழங்கவேண்டும்."

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் கூறியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான கஜேந்திர குமார் பொன்னம்பலம்.

ஈழத்தமிழர்களுக்கும் தமிழகத்தமிழர்களுக்கும் இடையிலான தொடர்பு தொப்புள்கொடி உறவு போன்றது என்பதை இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம். அதையே கஜேந்திர குமார் எம்.பியும் 'தாய் - சேய் உறவு' என்று நாடாளுமன்றத்தில் விவரித்திருக்கிறார்.

புலிகள் இந்திய நலன்களுக்கு எதிராகச் செயற்படுகின்றார்கள் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்து, இந்தியாவைப் பிழையாக வழிநடத்த சில குழுக்கள் பகீரதப் பிரயத்தனம் செய்துவருகின்றன என்ற தகவலையும் அவர் நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

இதேசமயம், இந்திய அரசிடமும் ஜனாதிபதியிடமும் தமிழ் இனத்தை விலைபேசி விற்கும் கைங்கரியத்தில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஈடுபட்டிருக்கின்றார் என இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகக் குற்றஞ்சுமத்தியிருக்கின்றார்.

ஆதாரம் ஏதுமின்றி எவர் மீதும் எடுத்த எடுப்பில் அபாண்டமாகக் குற்றம் கூறுவது மகேஸ்வர வழமை. அதுபோன்றே டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இந்தியத் தரப்புக்கும் இடையிலான தொடர்புகளை உறுதிப்படுத்தும் ஆதாரங்களை முன்வைக்காமலேயே குற்றச்சாட்டுக்களை அமைச்சர் மகேஸ்வரன் முன்வைத்திருப்பதால், அவரது இந்தக் குற்றச்சாட்டும் அவரது வழமையான 'புஸ்வாணக் குற்றச்சாட்டு' வகைக்குள் அடங்கிவிடப்போகின்றது என்பதுதான் சிரத்தைக்கு உரியது.

ஆனால், இப்பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி ஈழத்தமிழர்களுக்கு எதிராக - அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுக்கு இடைஞ்சல் தரும் விதத்தில் - சில நகர்வுகளை இந்தியா அண்மிக்காலத்தில் மேற்கொண்டு வருவது கண்கூடு.

இந்தவகையில் விடுதலைப் புலிகளைக் கடுமையாகச் சாடிவரும் டக்ளஸ் தேவானந்தாவை, அண்மைக்காலத்தில் இந்தியா அதிகம் அரவணைத்துப் போகின்றது - அவருடன் நெருங்கிச் செயற்படுகின்றது - என்பது தெளிவாகப் புலனாகியிருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

அதுவும் புலிகளின் போக்குக்கு மாறான நிலைப்பாட்டையுடைய சில சக்திகளை ஈழத்தமிழர் மத்தியில் வளர்ப்பதில் - ஊக்குவித்து வளர்த்து விடுவதில் - இந்தியா அதிக அக்கறை காட்டுவதாக வெளியான செய்திகளின் பின்னணியில் இதனை நோக்கவேண்டும்.

சில மாதங்களுக்கு முன்னர் இந்தியாவின் உளவுப் பிரிவான 'றோ' அமைப்பின் உயர் மட்டத்தில் இரண்டாவது நிலையிலிருக்கும் அதிகாரி ஒருவர் ஹெலிகொப்டர் மூலம் யாழ்ப்பாணத்துக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு ஈ.பீ.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் உயர் தலைவர்களோடு இரகசிய ஆலோசனை நடத்தினார் என செய்திகள் வெளியாகியிருந்தன. அது நடந்த சில நாள்களில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான றொபேட் தனது யாழ். அலுவலகத்தின் மாடியில் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் மர்மமான முறையில் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரின் மரணச் சடங்குகள் கொழும்பில் பெரும் எடுப்பில் நடத்தப்பட்டமைக்குப் பின்னணியில் வடநாட்டுக் கைகள் இருந்தன என்றும் கூறப்பட்டது.

றொபேட்டின் மறைவுக்குப் பின்னரே ஈ.பி.டி.பி. - இந்தியத் தரப்பு உறவு நன்கு துளிர்விட்டு விருத்தியடையத் தொடங்கியிருப்பதும் நோக்கர்களினால் அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

ஈழத்தமிழர்கள் சுயநிர்ணய உரிமையுடைய ஒரு தேசிய இனத்தவர்கள் என்ற அடிப்படை உண்மையை அங்கீகரித்து, அதனடிப்படையில் அவர்களுக்கும் அவர்களது அதிகாரபூர்வப் பிரதிநிதிகளுக்கும் தார்மீக ரீதியில் ஆதரவு நல்கும் தனது கடப்பாட்டை நிறைவுசெய்ய இந்தியா முன்வரவேண்டும். அதாவது, சுயநல லாபங்களுக்காகத் தமது மக்களின் விடுதலைப் போராட்ட உணர்வுகளைக் கொச்சைப்படுத்தும் மூன்றாந்தர அரசியல்வாதிகளுக்கு முண்டு கொடுப்பதை விடுத்து 'இந்தியா செயற்படவேண்டும்.

# யாழ்.மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்

## தொழில் திணைக்கள மாவட்ட அலுவலர் தகவல்

யாழ்.மாவட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தனியார் துறைகளில் பொருத்தமான வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கு யாழ். செயலகத்தில் இயங்கும் மாவட்ட தொழில்துறை திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இத்தகவலை தொழில்துறை திணைக்கள மாவட்ட அலுவலர் பி.ராகவன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டில் பல்லாயிரக்கணக்கான கல்விகற்ற இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி வேறுபட்ட பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர். அவற்றை நிவர்த்திசெய்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு தொழில்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அவற்றினைப் பூர்த்தி செய்து வெளியேறுவோருக்குத் தனியார்துறைகளில் வேலை வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.

இதன் முதற்கட்டமாக 'மிற்சுயி' சிமெந்து நிறுவனத்தின் அனுசரணையுடன் தொழில்துறைத் திணைக்களத்தினால் சுன்னாகம் நகரப்பகுதியில் யுவதிகளுக்கான ஆடைதயாரிப்பு நிலையம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படும் இந்த நிலையத்தில் சிறந்த அனுபவமிக்க பூவேலைப்பாடு, அலங்காரத் தையல் மற்றும் துணிகளை வெட்டிச் சிறந்த முறையில் தைக்கக் கூடிய 30 யுவதிகள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இவர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண தொழில்துறைத் திணைக்களத்தால் மூன்று மாதப் பயிற்சி வழங்கப்படுவதோடு பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு ஆடைதயாரிப்பு நிலையத்தில் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இதன்மூலம் யாழ்.குடாநாட்டிலுள்ள யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் பெற்றுக்கொடுப்பதோடு இங்கு உற்பத்தி செய்யப்படும் ஆடைகளை ஏற்றுமதி செய்து சந்தைப்படுத்துவதற்கும் வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.

இது வெற்றி அளிக்கும் பட்சத்தில் மேலும் புதிய தொழில் பயிற்சிகள் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் ஆரம்பிக்கப்படும்.

இந்த ஆடை தயாரிப்பு நிலையத்தில் இணைந்து பயிற்சி பெறவிரும்பும் யுவதிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் 'மாவட்ட அலுவலர், தொழில்துறைத் திணைக்களம், யாழ்.செயலகம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ-5)

# கைப்பணியாளர் ஒன்றியம் விரைவில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்;டிசெ.18

யாழ். மாவட்டத்திலுள்ள கைப்பணியாளர்கள் சகலரையும் ஒன்றிணைத்து 'கைப்பணியாளர்கள் ஒன்றியம்' மிகவிரைவில் உருவாக்கப்படவுள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை யாழ். செயலகத்தில் இயங்கும் மாவட்ட தொழில்துறைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

தும்புத் தொழில், பனையோலைக் கைத்தொழில், மரச்சிற்ப வேலை, கடதாசிப் பொம்மை செய்தல், மட்பாண்டப் பொருள்கள் செய்தல், தையல், ஒட்டுவேலை, துணி அச்சு மற்றும் அலங்காரப் பொருள்கள் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடும் கைப்பணியாளர்களை ஒன்றிணைத்தே இந்த ஒன்றியம் அமைக்கப்படவுள்ளது.

இத்தகைய கைப்பணிகளை மேற்கொள்ளும் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த கைப்பணியாளர்கள் தமது விவரங்களை இம்மாத இறுதிக்குள் யாழ். செயலகத்தில் இயங்கும் தொழில்துறைத் திணைக்கள மாவட்ட அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அலுவலர் பி.ராகவன் கேட்டுள்ளார். (ஐ-5)

# சட்டக்கல்லூரி பரீட்சைக்கு இங்கு வழிகாட்டி வகுப்புகள்

யாழ்ப்பாணம்,டிசெ.18

இலங்கைச் சட்டக் கல்லூரியின் நுழைவுப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளோருக்கான வழிகாட்டி வகுப்புகள் மாதந்தோறும் மாத இறுதியில்வரும் சனி, ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

'உதயன்' பத்திரிகை நிறுவனமும் சட்ட மாணவர் இந்து மகாசபையும் இணைந்து இந்த வழிகாட்டி வகுப்புகளுக்கு ஏற்பாடுசெய்துள்ளன.

அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள நுழைவுப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் சட்டக்கல்லூரியால் கோரப்படவுள்ளன. ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஓர் அமர்வில் பழைய பாடத்திட்டமாக இருந்தால் 4 பாடங்களில் சித்தி (S) அடைந்தவர்களும் புதிய பாடத்திட்டமாக இருந்தால் 3 பாடங்களில் சித்தி (S) அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

அல்லது -

ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி (C) பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். இதற்கு வயதெல்லை கிடையாது.

தகுதியும் ஆர்வமும் உள்ளோர் இந்த வழிகாட்டி வகுப்பில் கலந்துகொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அறிமுக வகுப்பு எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 'உதயன்' பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. அதில் கலந்துகொள்ள விரும்புவோர் முற்பகல் 10 மணிக்கு முன்னர் அங்கு வருகை தரவேண்டும் என்வும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-10)

### நாளை

மார்கழி 04
வெள்ளிக்கிழமை
(19.12.2003)
திதி : ஏகாதசி
பின்னிரவு 12.57 வரை
நட்சத்திரம்: சித்திரை
முற்பகல்: 10.10 வரை
ஏகாதசி விரதம்
சுபநேரம்: 6.23 - 7.53
ராகுகாலம்: 10.53 - 12.23
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மனதை அமைதியின் கருவி ஆக்குங்கள். தூயசிந்தனை தானே பிறக்கும்.

# கிராம மட்டத் தலைவர்களுக்கு ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சி

யாழ்ப்பாணம் டிசெ.18

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள கிராம மட்டத் தலைவர்களுக்கான ஆற்றல் மேம்படுத்தல் பயிற்சிப் பட்டறை நாளை வெள்ளிக்கிழமைமுதல் மூன்று தினங்கள் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சு ஆகியவற்றின் அனுசரணையுடன் இப்பயிற்சிப் பட்டறை இடம்பெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதிப.திலகநாயகம் போலும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகர சபை செயலாளர் மு.செ.சரவணபவ மற்றும் டிறிபேக் கல்லூரி அதிபர் எஸ்.நாகேஸ்வரராசா ஆகியோரும் கலந்துகொள்வர்.

'கிராம அபிவிருத்தியும் மகளிர் பங்குகளும்', 'அபிவிருத்தித் திட்டங்களில் சமூக நலன்பேணுதல்', 'அடிப்படை வசதிகளும் தொற்று நோய்களும்', 'பிரதேசத்திலுள்ள வளங்களை இனங்காணுதலும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும்', 'அபிவிருத்தித் திட்டங்களில் மக்கள் பங்களிப்பு' -

'மக்கள் தேவையும் மக்கள் தொடர்பும்', 'மீள்குடியமர்வும் அபிவிருத்தியும்', 'அரச சார்பற்ற நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகளும்', 'சுற்றாடல் பாதுகாப்பும் திண்மக் கழிவு முகாமைத்துவமும்', 'தரவு சேகரித்தலும் அதன் முக்கியத்துவமும்' -

ஆகிய தலைப்புகளில் அத்துறைசார் நிபுணர்களால் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன. (ஐ-5)

# உதவிப் பதிவாளர் நாயகம் தலைமையில் குழு வருகை

யாழ்ப்பாணம்;டிசெ.18

2004 ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள சகல மாவட்டங்களிலும் காணி உரிமைச் சான்றிதழ் வழங்குதல் தொடர்பான நடைமுறைகளைப் பரிசீலிப்பதற்காக மேலதிக உதவிப் பதிவாளர் நாயகம் ஈ.எல்.குணசேகர நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளார்.

கம்பஹா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் தற்பொழுது பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டுவரும் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையானது அடுத்த ஆண்டில் சகல மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதுதொடர்பாக யாழ். மாவட்டத்தில் பரிசீலனை மேற்கொள்ளவே மேலதிக உதவிப் பதிவாளர் நாயகம் தலைமையிலான குழுவினர் வருகைதந்துள்ளனர். இக்குழுவினர் நேற்று யாழ். செயலகத்தில் உள்ள பதிவாளர் அலுவலகத்துக்குச் சென்று பார்வையிட்டனர். மாவட்ட உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயருடனும் கலந்துரையாடினார்கள். பின்னர் பருத்தித்துறையில் உள்ள பதிவாளர் அலுவலகத்துக்கும் சென்று பார்வையிட்டனர்.

நேற்றுமுன்தினம் இக்குழுவினர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் சென்று இதுதொடர்பான நடைமுறைகளைப் பரிசீலித்தனர். (ஐ-10-5)




# சண்டியனுக்குப் பயமில்லை

மீனாவின் சிநேகிதி ரீற்றாவுக்கு பாடசாலைக்குப் போக நல்ல விருப்பம். ஆனால், அவள் பாடசாலைக்குப் போகப் பயப்படுகிறாள். தினமும் பாடசாலை போகும் வழியில் சண்டியனும் அவனின் குழுவினரும் கேலி செய்வதனை அவளால் தாங்கமுடியவில்லை. அவர்கள் அவளைப் பற்றிக் கூடாத குறிப்புகளைக் கூறுவதோடு, சில சமயங்களில் அவளின் புத்தகப்பையைப் பிடுங்கிக் கொண்டு திருப்பிக் கொடுக்க மறுப்பதுண்டு. சண்டியனுக்குப் பயந்து பாடசாலைக்குப் போகாமல் நிற்கக்கூடாதென மீனாவும் அவளின் தாயும் ரீற்றாவுக்குக் கூறுகின்றார்கள். அவளின் சிநேகிதிகளும் அவளும் ஒன்றாகச் சேர்ந்து இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என விரும்புகின்றார்கள். முதலில் மீனா அந்தச் சண்டியனுடன் பேசிப்பார்க்கின்றாள். ரீற்றாவைக் கேலி பண்ணுவதை நிறுத்திவிடுமாறு கூறுகின்றாள். அவன் அதைக் கேட்கவில்லை. மீனா வேறு பக்கம் திரும்பியதும் அவளின் கிளி மிதுவை அவன் பிடித்துக் கொண்டு போகின்றான். மீனாவும் அவளின் சிநேகிதிகளும் அன்று முழுவதும் மிதுவைத் தேடுகின்றனர். இறுதியில் ஒரு பெரிய பானையிலிருந்து அதைக் காப்பாற்றுகின்றனர். மிதுவைக் காப்பாற்றியதையிட்டு மீனா சந்தோஷப்படுகின்றாள். "சரி, இந்தச் சண்டியனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும்" என்று அவள் முடிவு செய்கின்றாள். (சி-32087)



அனுசரணை:
unicef
உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

3ஆம் குறுக்குத்தெரு அடைக்கல மாதா கோவில் மேற்குப் பக்கத்தில் ஆஸ்பத்திரி வீதிக்கு அருகில் கடை, வீடு கட்டக்கூடிய 1 பரப்புக் காணி சுற்றுமதிலுடன் (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்மத்திய கல்லூரிக்கு அண்மிய பகுதியில்) விற்பனைக்குண்டு. தொடர்பு இலேகநாதன் இல.62, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் (அல்லது) சென்ற் சட்டத்தரணி கதிரவேலுவின் வீடு) (25969)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புரொயிலர் இறைச்சிக்கோழிகள் சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் (பாதிக்கோழி உட்பட) வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். (சுத்தம் செய்தல் இலவசம்) தொடர்பு புரொயிலர் சென்ரர், வட்டுக்கோட்டை வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாய்.(25967)

## தவறிவிட்டது

புலோலி வடமேற்கு, புலோலியைச் சேர்ந்த ச.கந்தசாமி என்பவருடைய தே.அ.அ. (இல.761513206X) முகமாலைக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் 29-11-03இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மாலாவத்தை, புலோலி வடமேற்கு, புலோலி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.: 021 2263477. (25941)

## திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு மணமகளின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன. உங்கள் பிள்ளைகளின் திருமண சேவைக்கு எம்முடன் நேரில் தொடர்பு கொள்ளவும். டாக்டர் தசிவானந்தன், பிரபல சோதிடர் 264, பலாலி வீதி, கந்தர்மடம். (பேபி போட்டோ முன்பாக).

(25935)

1961, செவ்வாய் பாவமற்ற, கிரகபாவம் 48, B.Sc. கனடா Engineer இற்கு பாரக்க, அழகான மணமகள் 35 வயதிற்குள் தேவை. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்பு கொள்க. குலைவிலை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(25896)

## தேவை

கச்சான் அலுவா தொழிற்சாலைக்கு முன் அனுபவம் உள்ளவர்களுக்கும், பழக விரும்புகின்றவர்களுக்கும் வெற்றிடங்கள் உள்ளன. 21-12-2003க்கு முன்னர் நேரில் வரவும்.

**பவானி அலுவா கச்சான் தொழிலகம்**

32/1, கஸ்தூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (25975) (26)

## அறிவித்தல்

**764 சிற்றூர்திச் சேவைச் சங்கம், யாழ். புன்னாலைக்கட்டுவன்.**

764 பாதை சேவையில் சிற்றூர்திகள் கூடுதலாகவுள்ளதாலும் குறுகிய தூரத்தில் சேவை நடைபெறுவதாலும் புன்னாலைக்கட்டுவனிலிருந்து வசாவிளான் நோக்கி விஸ்தரிக்கப்படும் வரை சிற்றூர்திகளின் பதிவுகள் யாவும் 20.12.2003 ஆம் திகதியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகிறோம்.

*சிற்றூர்திச் சேவைச்சங்கம்*
*யாழ். புன்னாலைக்கட்டுவன்,*
*பாதை இலக்கம் 764.* (25942)(25-21-18-12)

மா.சிவபாதம்
தலைவர்.

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத்தினால் அபிவிருத்திப் பொருளியல் இதழ் 04 வெளியீட்டு நிதிக்காக 12.12.2003 அன்று நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

முதலாம் பரிசுக்குரிய இல. 4605
இரண்டாம் பரிசுக்குரிய இல. 5564
மூன்றாம் பரிசுக்குரிய இல. 7609

ஐந்து ஆறுதல்பரிசிற்குரிய இலக்கங்கள்:
3203, 8122, 1285, 5588, 8326

ஆதரவு வழங்கிய அனைவருக்கும் நன்றிகள்

(25947)(25-21-12-18) **இளம் பொருளியலாளர் மன்றத்தினர்.**

## SINHALA

மூன்றே மூன்று மாதங்களில் நீங்களும் சிங்களம் கதைக்கலாம்..!

பேச, எழுத, வாசிக்க

**GATEWAY By: Mr.MALWANA**

வழமையான நேரடி வகுப்புகளில் இப்போது நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

தூர இடங்களில் உள்ள மாணவ, மாணவிகளின் நலன்கருதி இப்போது தபால் மூலம் போதனைகளும் நடைபெறுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு ரூபா 4.50 முத்திரையுடன் தொடர்புகொள்ளுங்கள்

சிங்களம்
வழிகாட்டல் ஆசிரியர் திரு.மல்வான
(25933) இல.58, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

16-12-2003 முதல் 21-12-2003 வரை

இளைஞர்களே!
✪ சக்தி குறைவு ✪ ஞாபகமறதி ✪ பயம்
✪ நடுக்கம் ✪ நித்திரை குறைவு
என்பனவற்றால் தாழ்வு மனப்பான்மையா? கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்கப்படும்.

என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தயவுசெய்து முன்பதிவு செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு:-
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492 Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(சி-31861) (21-14)

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தப்பு கந்தையா**
(முன்னாள் பிரதம காசாளர், சினிமாஸ் லிமிட்டெட், கொழும்பு.)

தோற்றம் 18.05.1924 — மறைவு 29.12.2002

திதி : அபரபக்க தசமி

ஆண்டு ஒன்று மறைந்தாலும்
ஆறவில்லை உம்துயர்
ஈண்டு உமது நினைவுடனே இங்கு
நாம் வாழ்கின்றோம்.
இன்று நினைந்துருகியே
அஞ்சலியைச் செலுத்துகின்றோம்
ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி

[illegible]

பிரிவால் துயருறும்:
மகன், மருமகள்,
பேரப்பிள்ளை.

## இலங்கை அரசு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை
## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத்திட்டம்
## கடன் இலக்கம்: 2880 சி.இ.
## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
## (நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.

ஐ.எவ்.பி. இல: ஜேஎ/நீர்ப்/சீஎல்ஜி/01 திகதி: 18. 12. 2003

1. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத்திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியீடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரரிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
   ஐ.பி.ஆர்.டி.(IBRD) கடன் வசதி ஐ.டி.ஏ.(IDA) நம்பிக்கையின் கீழான வசதி
2. மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம், இலங்கை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடம் இருந்து பின்வரும் கட்டடத் தொகுதிகள் நிர்மாணிப்பதற்குக் கோரப்படுகின்றன.
3. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் கீழ்வரும் அட்டவணையில் உள்ளவாறு காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) அல்லது தபால் அலுவலகத்தில் பெறப்பட்ட காசுக் கட்டளையாகவோ (Money Order) மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் பேரில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 21.01.2004ஆம் திகதி பிற்பகல் 15.00மணி வரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
4. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

   பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
   பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
   செட்டித்தெரு, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 021-2222004, தொலைநகல் இல:021-2223410

5. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு *அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், கச்சேரி யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு 22.01.2004ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல் வேண்டும். அதே தினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.
6. வேறு விவரங்கள் தேவைப்படின் [illegible] கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

### விவர அட்டவணை

| கேள்விக் குறியீடு | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1. ஜே.எ/நீர்ப்/சிஎல்ஜி/சிபி/01 | 1.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக கட்டடம் நிர்மாணித்தல் | 91,000.00 | 800.00 | 06 மாதங்கள் |
| 2. ஜே.எ/நீர்ப்/சிஎல்ஜி/சிபி/02 | வலி.கிழக்கு பிரதேச சபை கட்டடம் நிர்மாணித்தல் | 89,200.00 | 800.00 | 06 மாதங்கள் |

7. கேள்விதாரர்கள் கேள்விகளுக்கான செயற்திறமான குறிப்புகள் 4ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாக கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகிறது. இந்தக் கேள்விப்பத்திரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ் வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும் ஆளணியும் அனுபவமும் இருப்பதும் ஒரு தனி ஒப்பந்தகாரருக்குத் தேவைப்படும் தகைமையை திருப்திப் படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

2003. 12. 15. (சி-32067) (26-12-21-18)

# எல்லைப்படை நினைவு வெற்றிக் கிண்ணத்தை இளவாலை யங்ஹென்றீஸ் அணி சுவீகரித்தது

யாழ்ப்பாணம்,டிசெ.18

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக தமிழீழ விளையாட்டுத்துறையினால் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சுந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றன.

இறுதியாட்டத்தில் யாழ். நாவாந்துறை சென்மேரீஸ் விளையாட்டுக் கழகமும், இளவாலை யங்ஹென்றீஸ விளையாட்டுக் கழகமும் மோதின.

போட்டி ஆரம்பமான நேரம் முதல் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடின. இருந்த போதும் முதல்பாதி ஆட்டம் முடிவடையும் வரை எந்த ஒரு அணியும் கோல்கள் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி 6 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றீஸ் அணியின் முன்வரிசை ஆட்டக்காரரான ஷேறன்ஸ் ரஜீவ் தனக்கு கிடைத்த பந்து ஒன்றை மிகவும் சாதுரியமாகக் கோலாக்கினார்.

யங்ஹென்றீஸ் அணியினர் ஒரு கோலைப் பெற்றுக்கொண்டதும் தமது ஆட்டத்தின் போக்கை மாற்றித் தடுத்தாட எத்தனித்தனர். இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சென்மேரீஸ் அணியினர் மிகவும் உத்வேகத்துடன் விளையாடினர்.

இந்த நிலையில் சென்மேரீஸ் அணி வீரர் கமல்ராஜ் தனக்குக் கிடைத்த பந்தை முன்னகர்த்தி ஒரு கோலைப் பெற்று கோல்நிலையைச் சமப்படுத்தினார். இதனை அடுத்து இரு அணிகளும் வெற்றிக்குரிய கோலைப் போடுவதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்த போதும் அது கைகூடவில்லை.

இறுதியில் 1-1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

பின்னர் வெற்றியை நிர்ணயிப்பதற்குச் சமநிலை தவிர்ப்பு உதைப்பு (ரைபிறேக்கர்) வழங்கப்பட்டது. இவற்றைச் சரியாகப் பயன்படுத்திய ஹென்றீஸ் வீரர்கள் 4-2 என்ற கோல் கணக்கில் வென்று எல்லைப்படை ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டனர்.

முன்னதாக இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கீடாப்பா ஏற்றினார். பொதுச்சுடரினை வலிகாமம் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வசந்தி, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் நிலான் மற்றும் வலிகாமம் லீக் செயலாளர் நடராசா ஆகியோர் ஏற்றி வைத்தனர். மாவீரர் பொதுப் படத்திற்கான ஈகச் சுடரினை தென்மராட்சி கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி அன்பு, மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கவியாளன் ஆகியோர் ஏற்றிவைத்து மலர்மாலை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற காட்சி உதைபந்தாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட அணியும், வலிகாமம் லீக் அணியும் மோதின. இவ்வாட்டம் 1-1 என்ற அடிப்படையில் சமநிலையில் முடிவடைந்தது.

தொடரின் ஆட்டநாயகனாக சென்மேரீஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜேசுதாஸனும் ஆட்ட நாயகனாக யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழக அணிவீரர் குகினேசனும் சிறந்த கோல் காப்பாளராக சென்றீக்கஸ் அணிவீரர் சசிகரும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றிபெற்ற கழகங்களுக்கான வெற்றிக்கிண்ணங்களை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, யாழ் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி மற்றும் முன்னாள் தடகள விளையாட்டு வீரர் எஸ்ஜெகிவிங்கம் ஆகியோர் வழங்கினர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மின்னொளியில் இடம்பெற்ற இவ்விறுதியாட்டத்தைப் பெரும் எண்ணிக்கையிலான உதைபந்தாட்ட ரசிகர்கள் கண்டுகளித்தனர். (உ-5)

# கொல்களங்களின் கழிவுகளால் வலி.தெற்கில் சுகாதாரம் பாதிப்பு

வலி.தெற்கு,டிசெ.18

வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொல்களங்கள் பலவற்றில் காணப்படும் கழிவுப் பொருள்கள் உரிய முறையில் அகற்றப் படாமையால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைவதாகவும், விவசாய நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொல்களங்களைச் சுற்றிப் பாதுகாப்பான வேலிகள் அமைக்கப்படவில்லை எனவும், கழிவுப் பொருள்கள் உரிய முறையில் அகற்றப்படுவதில்லை எனவும், பயன்படுத்தப்படும் குழிகள் உரியமுறையில் மூடப்படுவதில்லை எனவும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கொல்களங்களுக்கு அருகே குடியிருக்கும் மக்களின் சுகாதாரம் இதனால் பாதிக்கப்படுகின்றது. தொற்றுநோய்கள் பரவும் ஆபத்துக்கள் காணப்படுகின்றன. கிணற்று நீர் அசுத்தமடைகின்றது. விவசாய முயற்சிகள் மேற்கொள்ளமுடியாமல் உள்ளது. பிரதேச சபையினர் இவற்றுக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரியுள்ளனர்.

இக்குறைபாடுகள் தொடர்பாக மேல் நடவடிக்கை எடுப்பதற்குப் பிரதேச சபை நிதிப்பிரச்சினையை எதிர்நோக்குவதாகவும், நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், நிதி கிடைத்ததும் இக்குறைபாடுகள் நிவர்த்திசெய்யப்படும் எனவும் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஜ-152)

# சமாதான விழிப்புணர்வு குறித்து கிராமங்கள் தோறும் பேரணி

யாழ்ப்பாணம்,டிசெ.18

மக்களிடையே சமாதானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் கிராமங்கள் தோறும் சமாதானப் பேரணிகளை 'கியூடெக்' நிறுவனம் நடத்தவுள்ளது.

'கியூடெக்' நிறுவனத்தின் சமாதான உயிர்ப்பூட்டல் குழுவினரால் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக இன்று வியாழக்கிழமை சுதுமலைப் பகுதியிலும், நாளைமறுதினம் சனிக்கிழமை இளவாலை பாசிஸ்கூடல் பகுதியிலும் இப்பேரணிகள் நடைபெறவுள்ளன.

இப்பேரணியில் கலந்துகொள்ளும் சிறுவர்கள் சமாதானத்தை வலியுறுத்தும் சுலோகங்களையும், பெற்றோர்கள் தீபங்களையும் கைகளில் ஏந்தியவாறு கலந்துகொள்வார்கள்.

அனைத்து மதத் தலைவர்களின் கருத்துரைகளும் இப்பேரணியின் முடிவில் இடம்பெறவுள்ளன. (ஒ-8)

## உடுவில் கோட்ட அதிபர்கள் கூட்டம்

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில், உடுவில் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஜ-152)

## சாயி சிந்தனை



இறைவனிடம் இருக்கும் உனது உறவினைப் பற்றிய தெளிவு இல்லையெனில், உனது ஆன்மீக சாதனைகள் அனைத்தும் வீண். ஆனால், இந்த ஒற்றுமைத்தத்துவத்தைப் (இறைவனுடனான) புரிந்து கொண்டுவிட்டால், நீ எங்கிருந்தாலும், கடவுளுடன் ஒன்றாயிருக்கிறாய். தேகத்தின் மேல் வைக்கும் உறவு வெறும் பௌதிகமான உலகியல் பந்தம் மட்டுமே. அதற்கும் ஆன்மீகத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஒரு வீட்டுத் தலைவனை, அக்குடும்ப அங்கத்தினர்கள் பலவகையில் அழைக்கின்றனர் மகன் அப்பா என்றும் மருமகள், மாமா என்றும் பேரன், தாத்தா என்றும். உடலை வைத்து ஏற்பட்ட உறவினால் அழைக்கின்றனர். தேகத்தின் மேல் கொண்ட பற்றுதலால் மயங்கிப் போய்விடக்கூடாது. உடல் முழுமையும் அழுக்கும், நோயும் நிரம்பியது இந்த சம்சாரக் கடலை அதனால் தாண்ட இயலாது மனமே! எப்போதும் இவ்வுடல் நிரந்தரம் என நினைக்காதே! இறைவனது பாதங்களில் சரணமடைந்து விடு. உடல மீது வைக்கும் பற்றினால் பந்தங்களுக்குள் சிக்கி விடாதே! ஆத்மாவுடன் பற்றுதலை வளர்த்துக் கொள். அதற்காக புனிதச் செயல்களான ஶ்ரவணம் (இறைவனது புனித சரிதங்களைக் கேட்டல்), கீர்த்தனம் (அவர் புகழைப் பாடுதல்), ஸ்மரணம் (அவரை விடாது நினைவிலிருத்துதல்), பாதசேவனம் (இறைவனது தாமரைப் பாதங்களுக்கு சேவை செய்தல்), அர்ச்சனம் (வழிபாடு), வந்தனம், தாஸ்யம் (சேவகன்), ஸக்யம் (நட்பு), ஆத்ம நிவேதனம் (முழுமையான சரணாகதி) முதலியவற்றில் ஈடுபடு.

*(ஆதாரம்: சனாதன சாரதி நவம்பர் 1998)*

## கல்விச்சாலைக் காட்சிகள்



நல்லூர் ஞானோதய வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன் உரைநிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் மற்றும் விருந்தினர்களும் படத்தில் உள்ளனர். *(படம்: வலி.கிழக்கு செய்தியாளர்)*



சுதுமலை நாவலர் முன்பள்ளியின் விளையாட்டு விழாவில் சிறுவர்கள் காவடி நடனமாடுவதைப் படத்தில் காணலாம்.



யாழ். கல்விக் கழகத்தின் வருடாந்த கலைவிழா நிகழ்வில் இடம்பெற்ற சிறுவர் கலைநிகழ்வொன்றைப் படத்தில் காணலாம்.



மாதகல் காந்திஜி முன்பள்ளியில் இடம்பெற்ற நடமாடும் சுகாதாரக் கல்விச் சேவையின்போது பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.ரீ.செல்வம், பதில் உத்தியோகத்தர் எஸ்.திவ்வியகுமார் ஆகியோர் சிறுவர்களுக்கு விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: மாதகல் செய்தியாளர்)*



யாழ். மாநகர சபையின் புதிய பாலர் பாடசாலைத் திறப்புவிழா யாழ். மாநகர சபை பணிமனை வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட 'ஹேமாஸ்' நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி ஹுசைன் பலிக்கு சிறுமி ஒருவர் மலர்மாலை அணிவிப்பதையும் பாலர் பாடசாலைக் கட்டடத்தை யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் திறந்து வைப்பதையும் கட்டடத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம். *(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# WALK IN INTERVIEW
## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை
(பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் பெற்றது)

வெற்றிடங்கள்: 1. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (J.S.O.)
2. பாதுகாவலர்கள் (Patrolmen)

1. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (J.S.O.)
தகைமைகள்: க.பொ.த (சா/த) சித்தி
உயரம் 5'4" - மார்பு 32"
வயதெல்லை: 20 தொடக்கம் 55 வரை
(ஓய்வுபெற்ற பொலிஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை)
சம்பளம்: ஆரம்பம் ரூபா 4500/= (மாதமொன்று) தொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு கூடுதல் ஊதியம் வழங்கப்படும்.

2. பாதுகாவலர்கள் (Patrolmen)
தகைமை: ஆண்டு 8இல் சித்தி
உயரம் 5'2" - மார்பு 31"
வயதெல்லை 20 தொடக்கம் 45 வரை
சம்பளம்: ஆரம்பம் 4000/= (மாதமொன்று)

பொதுவான தகைமைகள்:
நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு: 1. வாரத்தில் ஒருநாள் ஓய்வு வழங்கப்படும்.
2. E.P.F, E.T.F. சேவைகளுக்கு ஏற்ப வழங்கப்படும்.
3. வெற்றிடங்கள்: பருத்தித்துறை, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
அந்தந்த இடங்களைச் சேர்ந்தோர் விரும்பத்தக்கது.

3. கிராம அலுவலரின் நற்சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, பாடசாலை சான்றிதழ் ஆகியவற்றின் மூலப்பிரதிகளுடனும் போட்டோப் பிரதிகளுடனும் கீழ்க்கண்ட விலாசத்துக்கு 20.12.2003 காலை 10 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

- பணிப்பாளர்.

இல.43, கல்லூரி வீதி,
(யாழ். இந்து மைதானம் முன்பாக)
யாழ்ப்பாணம்.
(சி-32055)(21-18)


## வேலை நிறுத்த முஸ்தீபு

கிளிநொச்சி,டிசெ.18

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்திருக்கின்றனர்.

இரு மாவட்டங்களின் சுகாதாரத் தொண்டர்கள் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடத்திய கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## கழகங்களுக்கான கலந்துரையாடல்

வலி.வட.கிருடிசெ.18

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் வி.விமுருகையா தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளையும் இதில் கலந்துகொள்ளும்படி நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் செ.மகிந்தன் கேட்டுள்ளார்.(ஒ-86)


### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 5 SRI இலக்கமுடைய ஒஸ்ரின் கேம்பிரிஜ் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.:0777-041214, 0777-836944
ANGEL TEX
இல.11, நவீன சந்தை வெளிப்புறம்,
(25951) யாழ்ப்பாணம். (25)



வரத பண்டிதர் இயற்றி
இலங்கை
வானொலிப் புகழ்
அருந்ததி ஸ்ரீ ரங்கநாதன்
பாடிய
"பிள்ளையார் கதை"
ஒலிப்பேழை கிடைக்குமிடம்
பிள்ளையார் அச்சகம்,
நல்லூர்.
(25944) 222 6722



## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஒளஷதம்

சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(குறிப்பு:- சந்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-31677)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 02 |  | 29 |
| - | | - |
| 01 | | 12 |
| - | | - |
| 1935 | | 2002 |

### அமரர் பொன்னையா நாகராசா பத்தர்

திதி: 18.12.2003

அன்பு என்னவென்பதை எமக்கு அறியவைத்தீர்கள்!
உங்களுடன் வாழ்ந்த காலங்களில்
நெஞ்சகலாத நினைவுகள் பல
ஆண்டவன் அடி சேர்ந்து
ஆண்டுகள் பல கழிந்தாலும்
அன்பான உங்கள் முகம் என்றும் எங்கள் நினைவில்

*உங்கள் ஆத்மா சாந்தியடைய அன்னை ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் பாத கமலங்களைப் பணிகின்றோம்.*

இன்று (18.12.2003) வியாழக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*258/6, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (25889) (25-21-18)

- குடும்பத்தினர்.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கோமதி சந்திரகுமார்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி மனோன்மணி அம்மாள்

அவர்கள் 14-12-2003இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை.
(25960)(21-18)

# வாதப்பிரதிவாதங்களால் பயனில்லை; காலத்திற்கேற்ற நடவடிக்கை அவசியம்

**பிரிட்டிஷ் அரசமைப்பின்படி "அரசமுடி, சட்டத்திற்கு அப்பாற்பட்டது" (Crown is above the Law). ஆனால், இந்த வாய்ப்பு அல்லது சலுகை அந்த நாட்டின் அரசமுடியினால் (அரசியால்) துஷ்பிரயோகம் செய்யப்படுகிறதா? இலங்கையில் இந்த நிலை உள்ளதா? என்று ஆராய்கிறது இந்த ஆக்கம். ரஞ்ஜித் ஆனந்த ஜயசிங்கவின் கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே உருவாகிய அரசமைப்புச் சிக்கல் தீர்வு எதுவுமின்றித் தொடர்கிறது. ஜனாதிபதி தான் தனது நடவடிக்கையிலிருந்து ஒரு அடி கூடப் பின்வாங்கத் தயாராயில்லை என்ற விதத்தில் கருத்து வெளியிட்டு வருகிறார். ஜனாதிபதியால் பெறப்பட்ட மூன்று அமைச்சர்களின் அதிகாரங்கள் மீண்டும் அவர்களிடம் கையளிக்கப்படும்வரை ஜனாதிபதியுடன் ஒத்துழைக்கப்போவதில்லையென அரசு கூறிவருகிறது. இதனால் இந்நாட்டு அரசியல் அரங்கில் நிலவும் குழப்பமான - நிச்சயமற்ற தன்மை தெளிவடையும் எனத் தோன்றவில்லை.

அரசுத்தரப்பும் ஜனாதிபதியும் தத் தமக்குரிய அதிகாரங்களை மதிப்பிட்டு இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். இதன் காரணமாக பிரச்சினை தொடர்பான சிக்கல்கள் மேலும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் கொண்டுள்ளது. இதனால், ஆட்சி அதிகாரம் அரசின் வசமுள்ளது. அரசமைப்பு மூலமான நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிட்டியுள்ளது. இவ்விரு தரப்பினரும் தத்தமது அதிகாரப்பலம் மறுதரப்பினரைவிட குறைந்ததல்ல எனக் கூறிக்கொள்கின்றனர். இந்த அதிகாரங்கள் யாருக்கு வழங்கப்பட்டிருப்பினும் அவை யாவும் இந்நாட்டின் பொதுமக்களால் வழங்கப்பட்ட அதிகாரங்களாகும். அரசமைப்பு மூலம் அவை வெவ்வேறு துறைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

### அதிகாரப் பிரயோகம்

இவ்விதம் சுத்தமக்கென வழங்கப்பட்ட அதிகாரங்களை அந்தந்தத் தரப்பினர் பிரயோகிக்கும் விதம் குறித்தே பிரச்சினைகள் உருவாகின்றன. 2001 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ரணிலின் தலைமையிலான ஐ.தே.முன்னணி வெற்றியடைந்தது. அதேசமயம் 1999ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் வெற்றி மூலமே சந்திரிகாவுக்கு ஜனாதிபதிப் பதவி கிட்டியது. அதன்படி ரணிலுக்குக் கிட்டிய மக்கள் ஆணையின் செல்லுபடிக் காலம் குறித்து ஜனாதிபதி சிந்தித்திருக்க வேண்டும். 2002ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.கட்சி பெற்ற அமோக வெற்றி,பொதுத் தேர்தலில் அக்கட்சி பெற்ற வெற்றியை மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்துவதாக அமைந்தது. அடுத்தடுத்து இரு தேர்தல்களில் வெற்றிகண்ட ஐ.தே.கட்சிக்கு ஜனநாயகத்தின் பெறுமதிமிக்க ஆபரணம் எனக் கருதத்தக்க மக்கள் ஆணை குறிப்பிட்டதொரு காலம்வரை உரித்துடையதென்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

ஆனால், ஐ.தே.கட்சிக்கு நிறைவேற்று அதிகாரம் கிடையாது. எதிர்வரும் 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை இந்நாட்டின் சகல நிறைவேற்று அதிகாரங்களும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கே உண்டு. அதற்கு முன்னர் சந்திரிகாவை ஜனாதிபதிப் பதவியிலிருந்து அகற்ற வேண்டுமாயின் அதற்கான ஒரே வழி அவருக்கெதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதாகும். அவ்விதம் அந்தப் பிரேரணை நிறைவேற்றவேண்டுமாயின் அப்பிரேரணை நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனேயே நிறைவேற்றப்படல் வேண்டும். அதுமட்டுமன்றி அவ்விதம் நிறைவேற்றப்படும் தீர்மானம் உயர் நீதிமன்றத்தின் நீதி விசாரணைச் சபையால் ஏகமனதாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஆகவே, குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டு வருவதன் மூலம் ஜனாதிபதியைப் பதவியிலிருந்து நீக்கும் நடவடிக்கை மிகுந்த சிரமமான நடவடிக்கையாகும். இதனை அரசு மட்டுமன்றி ஜனாதிபதியும் கவனத்திற்கொள்ளவேண்டும். ஜனாதிபதியும் பிரதமரும் இந்நாட்டின் முக்கிய இருகட்சிகளின்- லட்சக்கணக்கான ஆதரவாளர்களின்- நம்பிக்கைக்குப் பாத்திரமான தலைவர்களாவர். இத்தலைவர்கள் எப்போதும் பொதுமக்களின் நன்மை கருதியே செயற்படவேண்டியவர்களாவர். தத்தமது வசமுள்ள அதிகாரங்களை வெளிப்படுத்தும் போட்டியில் இவர்கள் ஈடுபட முயன்றால், அதனால் இந்நாடும் மக்களும் எவ்வித பயனும் அடையப்போவதில்லை.

### பதவி பறிப்பு

இநதத் தடவை ஜனாதிபதியினாலேயே பிரச்சினை தொடக்கிவைக்கப்பட்டுள்ளது. 2001ஆம் ஆண்டு தற்போதைய அரசு தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களில் மூவர் ஜனாதிபதி மூலமாகவே தத்தமது பதவிகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர். பிரதமரின் சிபார்சின் பெயரிலேயே இந்த அமைச்சர்களை நியமித்த ஜனாதிபதி அவர்களைப் பதவியிலிருந்து அகற்றிய வேளை பிரதமரின் கருத்தெதனையும் கேட்டறியவில்லை. பிரதமர் நாட்டில் இல்லாததொரு தருணத்தில் தனது நடவடிக்கைக்கான சட்டபூர்வமான காரணமெதனையும் தெரிவிக்காது திடீரென அம்மூவரையும் அமைச்சர் பதவியிலிருந்து ஜனாதிபதி அகற்றியுள்ளார். இதனை நியாயமானதொரு நடவடிக்கையெனக் கூறமுடியாதுள்ளது.

பதவி விலக்கப்பட்ட அமைச்சர்கள் உண்மையில் தவறிழைத்திருந்தால் அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுவதில் வாதப் பிரதிவாதத்துக்கு இடமில்லை. பொதுமக்களுக்கான தனது உரையில், பதவி நீக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சரின் நிர்வாகத்தால் நாட்டின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்ததாக ஜனாதிபதி தெரிவித்தார். பொலீஸ் சேவையில் ஊழல் மலிந்து காணப்படுவதாகவும், கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் பொ.ஐ.முன்னணியின் ஆதரவாளர்கள் பலர் கொலை செய்யப்பட்டனரெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். இச்செய்திகளில் ஒரு சில உண்மையானவையாகவும் இருக்கலாம். ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவின் நிர்வாகம் இடம்பெற்ற 1994 - 2001 காலப்பகுதியிலும் இவ்வித சம்பவங்கள் இடம்பெற்றுள்ளனவல்லவா? அந்தவேளையிலும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதல்லவா? ஸ்ரீலங்கா மத்திய வங்கி, தலதாமாளிகை மற்றும் தெஹிவளை புகையிரத நிலையம் ஆகிய இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களில் சிக்கிப் பல பொதுமக்கள் உயிரிழக்க நேரிட்டதல்லவா? அக்கால இடைவெளியிலும் அரசியல் படுகொலைகள் இடம்பெற்றனவல்லவா? எதிர்க்கட்சியின் ஆதரவாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக நேர்ந்ததல்லவா? முன்னைய அரசின் காலத்தில் இடம்பெற்ற வடமேற்கு மாகாண சபைத்தேர்தல் நியாயமான முறையில் இடம்பெற்றதாகக் கூறமுடியவில்லையே? பொ.ஐ.முன்னணி அரசின் நிர்வாகம் இடம்பெற்றவேளையில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பத்திரிகைத் தணிக்கை முறை மேற்கொள்ளப்பட்டதல்லவா? பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் பத்திரிகையாளர்கள் பலருக்கெதிராக வழக்குகள் இடம்பெற்றதல்லவா?

### நிலைமை மாறவில்லை

ஆனால், இன்று அவ்வித நிலைமையைக் காண இயலவில்லை. விடுதலைப் புலிகள் இன்று ஆயுதங்களை நாட்டுக்குள் எடுத்து வருகிறார்கள் எனக் கூறப்படுவது போல்று அன்றும் ஆயுதங்களைக் கப்பல்கள் மூலமாக எடுத்துவந்தனர். இன்று போன்று அன்றும் அவர்கள் முகாம்களை அமைத்தனர். ஆனால், கடந்த இரண்டாண்டு கால இடைவெளியில் நாட்டில் யுத்தம் மட்டும் இடம்பெறவில்லை. சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வரலாற்றில் முதல் தடவையாக விடுதலைப் புலிகள் அமைப்பு பேச்சுக்களின் பொருட்டு தமது இடைக்கால நிர்வாகசபை யோசனைகளை அரசிடம் கையளித்துள்ளது. அந்த யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பல விடயங்களை தென்பகுதிப் பொதுமக்கள் கடுமையாக ஆட்சேபிக்கின்றனர். இதனால் அரசுக்குத் தேவை இருப்பினும் இடைக்கால நிர்வாகமொன்றினை விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வழங்கமுடியுமெனத் தோன்றவில்லை. பேச்சுக்களை மேற்கொள்ளும் நோக்கோடு மட்டுமே இந்த யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அவை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையுமெனக் கருதக்கூடிய வகையானவையல்ல.

இதன் காரணமாக அமைச்சுப் பதவிகளை மீளப் பெற்றமையை நியாயப்படுத்தும் வகையில் ஜனாதிபதி வெளியிட்ட காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை. ஆனால், ஐதேகட்சியினால் 1978இல் அறிமுகப்படுத்தப்பட்ட தற்போதைய அரசமைப்பின்படி, காரணம் காட்டியோ அல்லது காட்டாமலோ அமைச்சுப் பொறுப்பொன்றினைத் தன்வசம் எடுத்துக் கொள்ளும் சட்டரீதியான அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. அவ்வித அதிகாரம் இருந்தபோதிலும், அமைச்சுக்களைக் கையேற்கும் அளவிற்கு இந்த அமைச்சுக்களின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட தவறென்ன? என்ற கேள்வி தற்போது எழுப்பப்படுகிறது.

### பேச்சுக்கான சந்தர்ப்பம்

இம்மூன்று அமைச்சுக்களும் மீண்டும் ஒப்படைக்கப்படாதவரை சமாதானப் பேச்சுக்கான சந்தர்ப்பம் கிடையாதெனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்குப் பாதுகாப்பு அமைச்சு மிக அவசியமானதொன்று

வீயெஸ்ரீ

என்பதால் அதனை மீளப் பெறும் வரை அவ்வித நடவடிக்கையை அரசால் ஆரம்பிக்க முடியாதெனவும், வேண்டுமானால் அந்நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பை ஜனாதிபதியிடம் கையளிக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக நிச்சயமற்ற தன்மை உருவாகியுள்ளது. அதேசமயம் தற்போதைய இச்சிக்கல் நிலைமையைத் தாம் அக்கறையுடன் அவதானித்து வருவதாக விடுதலைப் புலிகள் அமைப்புக் கருத்து வெளியிட்டுள்ளது.

### அரசியல் சிக்கல்

எது எவ்வாறு இருந்தாலும் நாட்டில் பாரதூரமான அரசியல் சிக்கல் உருவாகியுள்ளமை தெளிவாகிறது. இவ்விரு முக்கிய கட்சிகளின் ஆதரவாளர்களும் தத்தமது எண்ணப்படி கருத்துக்கள் வெளியிடுவதன் மூலம் தத்தமது தரப்புகளுக்கு உற்சாகமூட்டி வருகின்றனர். இது தற்போதைய சிக்கலை மேலும் வளர்ச்சியடையச் செய்யும் செயற்பாடுகளாகும்.

நாடு பொதுத்தேர்தலொன்றை நோக்கி மெதுமெதுவாக தள்ளிச் செல்லப்படுவதாகப் பெரும்பாலானோர் கருதுகின்றனர். ஆனால், இரு தரப்பினரையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் தற்போதைய நிலையில் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படுவதை விரும்பவில்லை. அவர்கள் இந் நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் முடிவடையும்வரை பதவியில் இருக்கவே விரும்புகின்றனர். இருந்தபோதிலும் அரசியற்பலம் காரணமான கர்வத்தால் தமது நிலைப்பாட்டிலிருந்து ஓரடி கூடப் பின்வாங்க இவர்கள் தயாராயில்லை. இந்த நிலையில் நாடு இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் சிக்கித் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

### வேறு ஒரு காரணம்

இன்றைய இச்சிக்கலுக்கு முக்கியமான வேறொரு காரணமும் உள்ளதாகத் தோன்றுகிறது. ஜனாதிபதி தனது தேவைக்கேற்ற விதத்தில் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு நடவடிக்கை மேற்கொண்டு வருதலே இச்சிக்கல் விரிவடைவதற்கான முக்கிய காரணமாகும். அதே போன்று அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் ஜனாதிபதி போன்றே தம் விருப்பப்படி சட்ட திட்டங்களுக்குத் தவறான அர்த்தம் கற்பித்து தமது நடவடிக்கைகளை நியாயப்படுத்தி வருகின்றனர்.



இந்த வகையில் உயர் நீதிமன்றம் கொண்டுள்ள அதிகாரங்களுக்குக் கூட, தத்தமது நன்மை கருதி தவறான அர்த்தம் கற்பித்து இயங்க ஆரம்பித்துள்ளனர். நிறைவேற்று அதிகாரமே நாட்டின் பெறுமதி மிக்கதென்பது ஜனாதிபதியின் வாதம். அதேசமயம் நாடாளுமன்றப் பெரும்பான்மை மூலம் தமக்குக் கிட்டியுள்ள அதிகாரமே பெறுமதிகொண்டதென்பது அரச தரப்பின் வாதமாகும். இவையிரண்டையும்விட அரசமைப்பே அதிகாரம் கொண்டுள்ளதென்பது உயர்நீதிமன்றத்தின் கருத்தாகும். இந்த மூன்று காரணங்கள் குறித்தும் தலைவெடிக்கும் அளவுக்கு இடம் பெறும் வாதப்பிரதிவாதங்களை அவ்வத் தரப்பினரிடமிருந்து கேட்கமுடிகிறது. இவற்றால் பொதுமக்களுக்கு எவ்வித நன்மையும் கிட்டப்போவதில்லை. இவ்வித வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றபோதும் பிரச்சினை முடிவேதுமின்றி அதே ஸ்தம்பித நிலையிலேயே உள்ளது. எனவே இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது குறித்துக் கவனமெடுத்தல் அவசியமாகும்.

இப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படாது, பொதுத்தேர்தலொன்றைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டாலும் பொதுத் தேர்தலின் பின்னராவது இந்நாட்டில் பல அரசியல் சிக்கல்களுக்குக் காரணமான அரசமைப்பு முறையில் மாற்றம் ஏற்படுத்தவேண்டியது இந்நாட்டின் முக்கிய இரு அரசியல் கட்சிகளின் பொறுப்பாக அமைகிறது. ஆனால், அதற்காக நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை எத்தரப்பினராலும் பெற்றுக்கொள்வது சாத்தியமில்லையாதலால், பொதுத்தேர்தலில் கட்சியின் கொள்கைப் பிரகடனமாக அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரும் நடவடிக்கையை முன்வைத்து பொதுமக்களின் ஆணையைப் பெறுவதன் மூலம் 1970ஆம் ஆண்டில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மேற்கொண்ட நடவடிக்கை போன்று புதிய அரசமைக்கும் கையுடனேயே அரசமைப்புச் சீர்திருத்தச் சபையைக் கூட்டிப் புதிய அரசமைப்பொன்றை உருவாக்கிக் கொள்ளமுடியும். மக்களின் ஆணை நாட்டின் சகல சட்ட திட்டங்களையும் விட பெறுமதி கொண்டதொன்றாகையால், அந்தவகையில் அரசமைப்பில் மாற்றம் ஏற்படுத்துவதைத் தவிர, இந்நாட்டின் எந்தவொரு அரசினாலும் சீரான நிர்வாகத்தை முன்னெடுக்க இயலாது. எதிர்காலத்தில் ஜனாதிபதி மற்றும் அரசு ஆகிய இருதரப்பும் சம்பந்தப்படும் சகல விடயங்களிலும் இவ்வித சிக்கல் நிலை உருவாகியேயாகும். எனவே, நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி மூலம் கிட்டும் சௌகரியங்களை அனுபவிக்க எண்ணாது, அடுத்த பொதுத்தேர்தலின் பின்னர் எவர் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டபோதிலும், இச்சிக்கல் நிறைந்த அரசமைப்பு முறையில் மாற்றம் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளத் தவறினால், எதிர்காலத்தில் இச்சிக்கல் மென்மேலும் அதிகரிக்க இடமுண்டு.

### தேசியப் புனரமைப்பு

சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய புனரமைப்பு மற்றும் கூட்டு அரசொன்று நிறுவுவது தொடர்பாகப் பேச்சுக்களில் ஈடுபடும் வழிவகை பற்றி ஆராயும் நோக்கில் இவ்வாரத்தில் தம்மைச் சந்திக்க நேரம் ஒதுக்கித் தருமாறு கடந்த வாரம் ஜனாதிபதி, பிரதமரைக் கடித மூலம் கோரியிருந்தார். அது மட்டுமன்றி நாட்டின் ஏனைய கட்சிகளையும் ஜனாதிபதி அவ்விதம் கோரியிருந்தார். இது தொடர்பாக ஒரு சில சிறிய அரசியல் கட்சிகளே தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ள போதிலும் ஐ.தே.கட்சி இதுகுறித்து இதுவரை எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இந்நாட்டில் அரசியலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலானோர் நாட்டின் சட்டதிட்டங்கள் மற்றும் அரசமைப்பு என்பவற்றின் மீதே நம்பிக்கை கொண்டுள்ளனர். இது உண்மையில் ஜனநாயக ரீதியிலான பின்னடைவாகும். இந்நாட்டுக்கு அரசமைப்பை உருவாக்கி வழங்கிய பிரிட்டனில் தற்போது அரசமைப்பு நடைமுறைப்படி நிர்வாகம் மேற்கொள்ளப்படுவதில்லை. அரசமைப்பைவிட சம்பிரதாயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாடாகப் பிரிட்டன் விளங்கி வருகின்றது. அந்நாட்டில் சட்டமொன்றில் மாற்றம் ஏற்படுத்துவதைவிட சம்பிரதாய நடைமுறையில் மாற்றமொன்றை ஏற்படுத்துவது சிரமமளிக்கும் ஒன்றாகும். இன்று எமது நாட்டுக்கும் அரசமைப்போ அல்லது சட்டதிட்டங்களோ மட்டும் அவசியம் எனத் தோன்றவில்லை. இவ்வித அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சாகச விளையாட்டுக்களால் இன்று பொதுமக்கள் கொதிப்படைந்து காணப்படுகின்றனர். ஆதலால் நியாயமான சட்டதிட்டங்களுக்குட்பட்ட சம்பிரதாய நடவடிக்கைகளும் எமக்கு இன்று அவசியத் தேவையாயுள்ளன. தற்போது நாட்டில் இடம்பெறும் குழப்பம் நிறைந்த அரசியல் நிலைமையை மாற்றியமைக்க இவ்வித சம்பிரதாயத்தைக் கடைப்பிடிக்கும் நடைமுறை மிகுந்த பயனளிக்கவல்லது. இவ்விதம் காலத்துக்கேற்ற நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளத் தவறுவோமானால், இந்நாட்டின் ஜனநாயகத்தின் ஆயுள் காலம் சுருங்கிவிடக்கூடும். *

## சக்தி F.M. தரும்

பண்டிகைக் கால சலுகைக் கட்டணம்

நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களை உங்கள் வாடிக்கையாளருக்குத் தெரிவிக்க

கட்டணம் ரூபா 3500/= மட்டுமே!

இந்தச் சலுகைக் கட்டணம்
2004 - ஜனவரி 15 ஆம் திகதிவரை மட்டுமே!

தொடர்புகளுக்கு: சக்தி F.M., சக்தி T.V.

அங்கீகரிக்கப்பட்ட யாழ். முகவர்:
ஜே.எகட்டன் செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

(கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை), கண்டுக்குளி.

அதிர்ந் தொலைபேசி: 0777 032188
தொலைநகல்: 222 7227

உள்ளகத் தொலைபேசி 222 7227.
பிரத்தியேக விளம்பரதாரர்
விஷேட விளம்பர மடிப்பிரப்பாளரும்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.
P.தேவா, குளாி வீதி, வட்டுக்கோட்டை.
T.P. 077 6043541

(சி-31899)(21-18-12)


## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 18 - 07 - 1954 | | 09 - 11 - 2003 |

**அமரர் இரத்தினசபாபதி சிறீஸ்கந்தகுமார்**

திதி: 18.12.2003

என்றும் உங்கள் நினைவுடன்

"பத்மா வாசா"
வளவி வீதி, ஆனைக்கோட்டை.

மனைவி, பிள்ளைகள்.

(25928)(35-21-18-12)

## துயர்பகிர்கின்றோம்

வாழ்வகச் சிறார்களின் அன்பு ஆசிரியை
திருமதி திருஞானநந்தினி செந்தில்குமரன்
அவர்களின் அன்புச் சகோதரி

### திருமதி அஜித்குமார் ஸ்ரீபாமினி
(சங்குவேலி வடக்கு, மானிப்பாய்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22-09-1977 | 15-12-2003 |

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, துயரில் நாமும் பங்கேற்று, அன்னாரின் ஆத்மா சாந்தியுற எல்லாம்வல்ல ஆண்டவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

வாழ்வக குடும்பம்
(விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்)

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

(21-12-18) (25950)

## மரக்கன்றுகள் விநியோகம்

தென்மராட்சி,டிசெ.18

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் மீள்நடுகைத் திட்டத்தின்கீழ் மரக்கன்றுகளை வழங்கி வருகின்றனர்.

பலைவேம்பு, சமண்டலை, தேக்கு போன்ற மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன. (ஐ-117)

## விளையாட்டு போட்டிக்கு விண்ணப்பங்கள்

தென்மராட்சி,டிசெ.18

தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே 2004ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான விண்ணப்பப்படிவங்கள் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன.

போட்டிகளில் கலந்துகொள்ளும் வீர, வீராங்கனைகளின் விபரங்களுடன் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைக் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## இசை விழாவையொட்டி போட்டிகள்

அரியாலை,டிசெ.18

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் 2004ஆம் ஆண்டிற்கான இசைவிழாவையொட்டி நடத்தப்படும் இசைப்போட்டிகள் எதிர்வரும் ஜனவரி மாத இறுதியில் ஆரம்பமாக உள்ளன.

இந்தப் போட்டிகள் அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் என்றும் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

வாய்ப்பாட்டு, மிருதங்கம், பரத நாட்டியம், வயலின் போன்ற இசைப் போட்டிகள் இடம்பெறும். (ஐ-17)

## புலமைப்பரிசில் மாணவருக்கு உதவித்திட்டம்

கொழும்புத்துறை,டிசெ.18

அரியாலை அபிவிருத்திச் சங்கம், அப்பிரதேசத்தில் வாழும் தரம் 5 மாணவர்களுக்கான 2004ஆம் ஆண்டிற்குரிய புலமைப்பரிசில் உதவித்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இந்தத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குடும்ப அட்டை, 2003ஆம் ஆண்டிற்கான மாணவர் தேர்ச்சி அறிக்கை என்பவற்றுடன் வருகைதருமாறு அரியாலை அபிவிருத்திச்சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ஐ-30)


ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சை

த.தவசேகர் B.Sc.
19.12.2003 மாலை 3.30 மணி

ஞானோதயா
சாவகச்சேரி.


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கதிரவேலு பரமசாமி

திதி: தசமி

இறைபணியும் பிறர்நலமும்
– தமிழ்நலமும்
இலட்சியமாய்க் கொண்ட நீ
விண்ணகம் விரைந்து
– மூன்றாண்டாயினும்
மண்ணகம் உன்பணி மறக்குமோ தம்பி
ஞானவைரவரடியின

உன் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்:
சகோதரி
திருமதி கு. ஷண்முகதாஸ்

தலையாழி,
கொக்குவில்.

(29945) (25-21-12-18)


## பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டெட்
### சம்பளம் வழங்கல்

பரந்தன் தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளம் 21.12.2003 (ஞாயிற்றுக்கிழமை) தொடக்கம் 23.12.2003 (செவ்வாய்க் கிழமை) வரை வழமையான இடத்தில் வைத்து வழங்கப்படும்.

கா.சிவபாதசுந்தரம்
(தொழில் முகாமையாளர்)

(25955)(35-21-12-18)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 - 11 - 1944 | | 29 - 12 - 2002 |

திருமதி

**பாக்கியலெட்சுமி இலட்சுமிகாந்தன்**

வல்வெட்டித்துறை

திதி: 18.12.2003

*அகலாத உங்கள் நினைவோடு ஆண்டு ஒன்று மறைந்தது.*

அன்பின் பிறப்பிடமே பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே இல்லறம் வாழ்ந்து
இனிய ஐந்து முத்துக்களை ஈன்று அந்த செல்வங்களின்
உயர்ச்சிகாண இரவு பகல் பாராது உழைத்து
உங்களை உருக்கி மறைந்த தெய்வமே
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்
நினைவுகள் மனதை விட்டகலாது.

குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (25932)(25-21-12-18)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 6ஆம் மாத நினைவஞ்சலி



| தாயின் மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 21 - 09 - 1940 | | 24 - 06 - 2003 |

**திருமதி சிவசுப்பிரமணியம் சிவக்கொழுந்து**

வாழ்வின் கலங்கரை விளக்காய்
வையகத்தில் வந்துதித்த எம் அம்மாவே!
வாழ்வில் மாண்புடன் வாழ்வதனில் வழி காட்டி
சிறப்புடன் வாழ்வதற்கு நல்வழி வகுத்தவரே
பிள்ளைகளை வளர்ப்பதில் - தாயாய்
பேரப்பிள்ளைகளை வளர்ப்பதில் - பேர்த்தியாய்
உறவுகளுக்கெல்லாம் வாழ வழிகாட்டியவளே!
உற்றார், உறவினருடன் அன்பும் பாசமுமாய் இருந்தவளே!
எல்லோரையும் தவிக்கவிட்டு எங்கு நீ சென்றாய்?

நிரந்தர முகவரி:
நீர்வைநாம்.
வன்கோவிலடி
ஏழாலை.

தற்காலிக முகவரி:
மார்க்கோனி எலக்ரோனிக்
202, K.K.S. வீதி
யாழ்ப்பாணம்

கணவர்,
பிள்ளைகள்.

(25952)(35-21-12-18)

## மரண அறிவித்தல்

### நாகமுத்து சபாரத்தினம்
(முன்னைநாள் லிகிதர் - றோலன்ஸ் கம்பனி)

காரைநகர், பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், சண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சபாரத்தினம் அவர்கள் 15-12-2003 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் நாகமுத்து - சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கனகலட்சுமி (இராசமணி) யின் அன்புக் கணவரும், சந்திரகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலகுமார், காலஞ்சென்ற ஜெயமனோகரி, மற்றும் சாரா ஜெயமாலினி, சூரியகுமார் (லண்டன்), ஜெயந்திமாலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயராஞ்சிதம் (பிரான்ஸ்), மரியஸ்ரேலா (லண்டன்), உதயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிரோஜன், அனோஜன், சினொபியா, அஜீரி, யூலியா, அர்ந்தினா, நிரஞ்சினா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-12-2003) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலவாசட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சண்டிக்குளி. (25964)(35-21-12-18)

தகவல்:
ச.கனகலட்சுமி (இராசமணி-மனைவி)

# இணைந்து வாழ்வதா? பிரிந்து செல்வதா? தீர்மானிக்கக் கோருகிறது தமிழ்க்கூட்டமைப்பு

தமிழர்கள் சிங்களவர்களுடன் இணைந்து சகவாழ்வு வாழ்வதா அல்லது பிரிந்து செல்வதா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. எமது மக்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டால் அவர்கள் தனி அரசுப் பாதைக்கு இட்டுச் செல்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியான இராஜதுரை சேனாதிராஜா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்தார்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்தல் மற்றும் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சுகள் தொடர்பான விவாதத்தின் போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்கு புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக பல அமைச்சுகளும், பல அமைச்சர்களும் இருக்கின்றனர். உள்நாட்டு, வெளிநாட்டு உதவிகளாகப் பல கோடி டொலர்கள் கிடைத்துள்ளன.

ஆனால், எந்த ஓர் அபிவிருத்தி, புனர்வாழ்வுத் திட்டங்கள் தொடர்பாகவும் அப்பிரதேசத்தில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் எவருடனும் கலந்தாலோசிக்கப்படுவதில்லை. சில அரச அதிகாரிகளின் வழிகாட்டலில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித்திட்டங்களில் பாரிய மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரால் மீள்குடியேற்றம் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே அகதிகளாக வாழ்பவர்களுக்குக் கூட கடந்த மூன்று மாதங்களாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை. எமது மக்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டே வருகிறார்கள். இது வேதனைக்குரியது.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பிரதமர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அமைதி ஏற்படும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், ஜனாதிபதியின் தன்னிச்சையான நடவடிக்கையினால் சமாதானப் பேச்சுக்கள் கேள்விக்குறியாகியுள்ளன.

எப்போது தீர்வுகாண முயற்சிக்கும் போதும் கடைசி நேரத்தில் காலை வாரிவிடுவது இந்தச் சிங்களத் தலைமைகளின் வழக்கம். இன்றைய நிலையும் அதுதான். நாம் இணைந்து வாழ்வதா, இல்லை பிரிந்து செல்வதா என்பதைச் சிங்களத் தலைமைகளே தீர்மானிக்கவேண்டும்.

மேலும், புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் சமாதான இசை நிகழ்ச்சிகளுக்கும், சமாதான யாத்திரைகளுக்கும் கூடுதலான நிதி செலவிடப்படுகிறது.

- இப்படி அவர் கூறினார்.

### சித்தார்த்தன்

அடுத்துப் பேசிய புளொட் உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், நாட்டில் நிரந்தர சமாதானத்தையும் இனப்பிரச்சினைக்குத் தீர்வையும் காணவேண்டும் என்ற நோக்கம் தென்பகுதி அரசியல்வாதிகளிடம் இல்லை என்று குற்றஞ்சாட்டினார்.

ஆனால் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் அதிகாரப் போட்டியில் சிக்கித் திக்குமுக்காடுகின்றன. அதிகாரம் யாரிடம் இருக்கவேண்டும் என்பது எங்களுடைய பிரச்சினையல்ல. இந்த நாட்டில் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படுவதை எவருமே விரும்பவில்லை. அதுதான் விவகாரம்.

கடந்த இருபது வருடகால யுத்தத்தினால் சொந்த மண்ணில் இருந்து வெளியேறி அகதிகளாக வாழும் பல லட்சம் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், புனர்வாழ்வு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி, யானைப் பசிக்குச் சோளப்பொரியைப் போன்றது என்றும் சித்தார்த்தன் எம்.பி. குறிப்பிட்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான திலீப் குணவர்த்தன காணி அமைச்சைப் பற்றியோ அல்லது புனர்வாழ்வு அமைச்சைப் பற்றியோ பேசாமல் புலிகளின் பட்ஜெட் தொடர்பாகவும், இடைக்கால நிர்வாக சபை தொடர்பாகவுமே விமர்சனம் செய்தார். இதனால், அரச தரப்பு உறுப்பினர்களுக்கும் எதிரணியினருக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

வன்னிப் புனர்வாழ்வு மீள்குடியமர்த்தும் செயலணித் தலைவரும் வன்னிமாவட்ட ஸ்ரீல.மு.கா. உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பேசும் போது அண்மைக்காலத்தில் அமைச்சர் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக விளக்கமளித்தார்.

புறக்கணிக்கப்பட்ட முஸ்லிம் கிராமங்கள் புனரமைக்கப்பட வேண்டும்; அங்கு பாதைகள் சீரமைக்கப்பட வேண்டும். சொந்தக் காணிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேற வழிவகுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிவாஜிலிங்கம் எம்.பி.யும் காரசாரமாகவும் உணர்வு பூர்வமாகவும் சில விடயங்களை முன்வைத்தார்.

தமிழ்மக்கள் எப்போதும் பிச்சை கேட்கவில்லை; பிச்சைப் பாத்திரம் ஏந்தவும் தயாராக இல்லை. சுயநிர்ணய உரிமையுடன் தலைநிமிர்ந்து வாழவே விரும்புகிறார்கள். புனர்வாழ்வு உதவிகளை நாம் கேட்கவில்லை. அதற்காகக் கூடுதலான நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்றும் நாம் கேட்கமாட்டோம்.




எவ்வளவுதான் தந்தாலும் உங்களால் எங்களுக்கு உண்மையான நிவாரணத்தை வழங்க முடியாது. எங்களுடைய தலைவிதியை நாங்களே நிர்ணயித்துக்கொள்வோம்.

சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். ஜனாதிபதியா அல்லது பிரதமரா சமாதானப் பேச்சைத் தொடரப்போகிறார்கள் என்று திட்டவட்டமாகத் தீர்மானித்துக்கொள்ளுங்கள். சமாதானத்தின் மூலம் உங்களால் தீர்வுகாணமுடியாவிட்டால் வெளிப்படையாக அதைத் தெரிவித்து விடுங்கள். நாங்கள் தமிழ்த் தேசியத்தை அமைத்து, அங்கு தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தி சுயாட்சியின் கீழ் வாழ்வோம்.

வடக்கில் இன்று முஸ்லிம்கள் விரட்டி அடிக்கப்பட்டனர் என்று குறை கூறப்படுகின்றது. அதற்காக நாம் கவலைப்படுகின்றோம். மீண்டும் அவர்களை வரவேற்று அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பை வழங்குவோம்; அது உறுதி. எமது தமிழ்த் தேசியத்தில் வாழும் சிங்கள சகோதரர்களும் சம உரிமைகளுடன் வாழ வழி வகுப்போம்.

- இப்படி அவர் கூறினார்.

### கூட்டணி மீது மதனராஜா பாய்ச்சல்

அடுத்துப் பேசிய ஈ.பி.டி.பி. உறுப்பினர் நடராஜா மதனராஜா அமைச்சர் மகேஸ்வரனையும் தமிழ்த் தேசிய கூட்டணி உறுப்பினர்களையும் கடுமையாகச் சாடினார். அப்போது கூட்டணி உறுப்பினர்களை விரல் நீட்டிக் காட்டி "வைக்கோல் பட்டறை நாய்கள்" என்று பல்முறை அவர் சாடினார். இதனால் தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் மதனராஜாவுக்கும் இடையில் பலத்த கருத்து மோதல்கள் இடம்பெற்றன.

மதனராஜாவும் விட்டுவிடுவதாக இல்லை. அமைச்சர் மகேஸ்வரனை நேரடியாகவே சாடினார். "மகேஸ்வரன் மண்ணெண்ணெய் வியாபாரத்தில் ஆரம்பித்து இன்று பால் வியாபாரம் வரை போய்விட்டார். சுவாமிக்கு கொண்டு செல்லும் பூக்கூடைக்குள் 'ஒயில்' போத்தல்களை மறைத்து வைத்துக் கடத்திக் கொள்ளை இலாபம் அடித்தார். அத்தோடு நின்று விடவில்லை. கோயில்களுக்கு மூன்று லட்சம் ரூபாவை வழங்கிவிட்டு அதில் ஒரு லட்சத்தை கோயில் நிர்வாகத்திடமிருந்து திரும்பப்பெறுகின்றார்" என்று மதனராஜா எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

ஆனால், அமைச்சர் இவற்றையெல்லாம் முற்றாக நிராகரித்தார்.

"எங்களுடைய தலைவர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்த போது வடக்கு - கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவிடாமல் கூட்டமைப்பினர் தடைபோட்டனர். வடக்கில் மக்கள் இல்லை மரங்கள் மட்டுமே இருக்கின்றன. அங்கே அபிவிருத்தி தேவையில்லை; உரிமைதான் அவசியம் என்று கூட்டமைப்பினர் அப்போது கூவினர். இப்பொழுது அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவில்லையே என்று போலியாகக் கண்ணீர் வடிக்கின்றனர் என்றும் அவர் சாடினார்.

ஆனால், அமைச்சர் மகேஸ்வரன், புனர்வாழ்வு அமைச்சின் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்தார். முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியாவிடமும் ஜனாதிபதி சந்திரிகாவிடமும் தமிழ் மக்களின் விலை பேசிய நன்மானம் கெட்டவன் - என்று அவர் சாடினார்.

இன்றைய புனர்வாழ்வு அமைச்சு பத்திரிகை விளம்பரங்களில் மட்டும் தானே ஒழிய செயற்பாட்டில் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான மஹிந்தானந்த அளுத்கமகே இன்டியாத்தை புதிய கோணத்தில் அணுகினார்.

கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீமும் வன்னிப் புனர்வாழ்வுக்கு நூர்தீன் மசூரும் நியமிக்கப்பட்டுள்ளபோது, வடபகுதி தமிழ் பிரதேச அபிவிருத்திக்குத் தென்பகுதி அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அமைச்சு வடபகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்டவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் - என்று அவர் குறிப்பிட்டார்.

ஆனால், ஜே.வி.பி. உறுப்பினரான இராமலிங்கம் சந்திரசேகரன், அமைச்சின் சகல நடவடிக்கைகளையும் கண்டித்ததோடு, வடபகுதி மக்களுக்கு அமைச்சர், பாவனைக்கு உதவாத அரிசியை விநியோகித்து பல கோடி ரூபாவை மோசடி செய்துள்ளார் என்றும் குற்றஞ்சாட்டினார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன முற்றாக நிராகரித்தார்.

"இன்று நாம் வடக்கையும் தெற்கையும் ஒன்றாக இணைத்துள்ளோம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு நாட்டில் அமைதியை ஏற்படுத்தி உள்ளார். ஆனால், ஜே.வி.பியினர் நாட்டில் இனத்துவேசத்தைக் கிளப்பி இரத்தக்களரியை ஏற்படுத்தவே முனைகின்றனர்.

"வடக்கு - கிழக்கில் இந்த அரசு என்ன செய்துள்ளது என்பதை ஜே.வி.பியினர் அறியவில்லை. இப்போது ஏ-9 பாதை திறக்கப்பட்டுள்ளது. தரைவழியாக அங்குவர அச்சம் என்றால் விமானத்திலாவது அவர்களைக் கூடா நாட்டுக்கு நான் அழைத்துச் செல்கிறேன். ஜே.வி.பியினர் வரத்தயாரா?"

- இப்படி அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன கேள்வி எழுப்பினார்.

காணி அமைச்சு தொடர்பான விவாதத்தின்போது சமூர்த்தி அமைச்சர் சில உண்மைகளை ஒப்புக்கொண்டார்.

அரச காணிகள் விநியோகத்தில் குளறுபடிகளும் மோசடிகளும் இடம்பெறுவதற்கு, முக்கிய காரணியாக இருப்பவர்கள் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவில் பணிபுரியும் அதிகாரிகள்தான் என்று சாடினார் சமூர்த்தி அமைச்சர் ஆர்.எம்.டி.சிறிசேன.

காணி அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் சிறிசேன இதனை வெளிப்படையாகக் கூறினார்.

காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர்.

ஆனால், அவை எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் -

அதேவேளை, அங்கு இடம்பெறும் மோசடிகளை மூடிமறைத்துவிட முடியாது என்றும் - அமைச்சர் கூறினார்.

"எனது பிரதேசத்தில் ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் இருக்கின்றன. ஆனால் இந்த அரச காணிகள் எங்கே இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவற்றிற்கான பதிவுகளோ, உறுதிகளோ அலுவலகங்களில் இல்லை."

"ஆனால், காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவில் பணிபுரியும் அதிகாரிகள் இந்தக் காணிகள் எங்கே இருக்கின்றன என்பதைத் தமது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் காட்டிக்கொடுத்து அவற்றை அரசியல்வாதியின் சிபார்சுகளுடன் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

"முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மோசடிகள் இப்பொழுதும் தொடர்கின்றன. சில அதிகாரிகளின் தூண்டுதலில் பலர் வந்து என்னிடம் சிபார்சுக் கடிதங்களைக் கேட்கின்றனர். இதனை நான் அனுமதிக்கமாட்டேன்; ஊழியர்களின் தவறுகளுக்குத் துணை புரியமாட்டேன்" - என்றார் அமைச்சர் ஆர்.எம்.டி.சிறிசேன.

"காணி அமைச்சினால் நடத்தப்படும் காணிக் கச்சேரிகளில் அரசியல் தலையீடுகளும், மோசடிகளும் மலிந்துவிட்டன. காணிகள் உண்மையாகவே காணி இல்லாதவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அப்படியே வழங்கப்பட்டாலும், அக்காணிகளில் அவர்கள் வீடுகளைக் கட்டுவதில்லை. பணம் படைத்தவர்கள் அக்காணிகளை வாங்கி அவற்றில் தேயிலை பயிரிடுகின்றனர். இதனால் தொடர்ந்தும் காணியற்றவர்கள் இருந்துகொண்டே இருக்கின்றனர்.

"அதுமட்டுமன்றி, அரச காணிகளில் அரசியல் செல்வாக்குடன் பல தனவந்தர்கள் தேயிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். மலை உச்சிகளில் மரங்கள் வெட்டப்பட்டு காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இதனாலேயே இரத்தினபுரி மாவட்டத்தில் மண்சரிவுகள் ஏற்படுகின்றன. இதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்"

- இப்படிக் கோரிக்கை விடுத்தார் முன்னாள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன.

கண்டி மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான மஹிந்தானந்த அளுத்கமகே அமைச்சர்கள் ஊழல்களிலும், மோசடிகளிலும் ஈடுபட்டுள்ளனர் என்று சாடினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சாம்பிராணித் தட்டுடன் சர்வதேச நாடுகளில் வலம்வருகிறார். ஆனால் அமைச்சர்களோ உள்நாட்டில் இருந்துகொண்டே அரச சொத்துக்களைச் சுரண்டுகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீல.மு.காங்கிரஸ் உறுப்பினரான எச்.எம்.ஹரீஸ் எம்.பி. - கல்முனை நகரில் வர்த்தகம் செய்பவர்களுக்கும் குடியிருப்பவர்களுக்கும் காணி உறுதிகள் இல்லை. கல்முனையில் 43 வீதமான முஸ்லிம்கள் இருக்கின்ற போதும் அவர்களில் 15 சதவீதமானவர்களுக்குக் கூட காணிகள் இல்லை. இந்த முறை நீக்கப்பட வேண்டும் - என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான மைபோன் முஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)







காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சைவ அறப்பணி நிலைய திறப்புவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

திருவாவடுதுறை ஆதீன 23ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் சிந்தாமணி குரு பீடாதிபதி ச.மகேஸ்வரக்குருக்கள், கலாநிதி சிவஸ்ரீ கு.வைத்தீஸ்வரக்குருக்கள் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும் - சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் சைவ அறப்பணி நிலையத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதையும், அமைச்சர் தி.மகேஸ்வரன் அறப்பணி நிலையத்திற்குள் சுவாமிகளை அழைத்துச் செல்வதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: காரைநகர் செய்தியாளர்)

# பின்னுறுதி தீர்வை
## ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

தேவசகாயம் ஜீவராசா
6ஆம் வட்டாரம் வேலணை மேற்கு
வேலணை.

வழக்காளி

வழக்கு இல: மணநீக்கம்/01

எதிர்

ஜீவராசா பெண் திரேசா முன்னர்
பிரான் மகள் திரேசா,
அரசடி விநாயகர் வீதி, கட்டுடை,
மானிப்பாய்.

எதிராளி

இவ்வழக்கு 2001ஆம் ஆண்டு தை மாதம் 10ஆம் திகதி ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும், வழக்காளியின் சட்டத்தரணி திருமதி சறோஜினி இளங்கோவன் அவர்களும் பிரசன்னமாயிருக்க இவ்வழக்கில் எதிராளிக்கு பதில் சேவிப்பாக 'உதயன்' பத்திரிகையில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு அழைப்புக்கட்டளை சேவிக்கப்பட்டு எதிராளியோ எதிராளி சார்பில் எவரேனும் சட்டத்தரணியோ இம்மன்றில் தோன்றாது மறுமொழியணைக்காது தவறியதால் 10.01.2003 அன்று வழக்காளியால் அளிக்கப்பட்ட சாட்சியத்தையும் வழக்காளியால் அணைக்கப்பட்ட பிராது 04.10.1989 ஆம் திகதியிட்ட திருமண அத்தாட்சிப் பத்திரம் என்பவற்றை நன்கு பரிசீலனை செய்து 1989 ஆம் ஆண்டு ஐப்பசி 4 ஆம் திகதி வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே நடைபெற்ற பதிவுத் திருமணத்தை ரத்துச்செய்து இத்தால் கட்டளையிட்டு தீர்வைசெய்யப்படுகின்றது.

இப்பின்னுறுதி தீர்வையின் பிரதியை பதில் சேவிப்பாக 'உதயன்' பத்திரிகையில் விளம்பரம் செய்து அவ்வாறு பிரசுரித்த திகதியிலிருந்து மூன்று மாத காலத்துள் எதிராளி இந்த பின்னுறுதி தீர்வைக்கு ஆட்சேபனை செய்யாதவிடத்தில் இப்பின்னுறுதி தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படும் எனவும் இத்தால் கட்டளையிட்டு தீர்வை செய்யப்படுகின்றது.

2001ஆம் ஆண்டு தை மாதம் 01ஆம் திகதி.

ஒப்பம்
மாவட்ட நீதிபதி
ஊர்காவற்றுறை.
District Judge
DISTRICT COURT KAYTS

வரைவு:
லிங்கா துரைராஜா
வழக்காளியின் சட்டத்தரணி.

(25971)(35-12-18-25)

# கருத்தரங்கும் செயலமர்வும்

வலிகாமம்தெற்கு,டிசெ.18

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளில் ஆறாம் தரம் தொடக்கம் 11ஆம் தரம் வரை சமூகக்கல்விப்பாடம் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் இன்று வியாழக்கிழமை காலை ஒன்பது மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (ஐ-152)

# இணைந்து....

(11ஆம் பக்கத்தொடர்ச்சி)

தா மற்றும் ஒரு கோரிக்கையை முன்வைத்தார்.

அதாவது, ஆயுதப் படைகளில் கடமையாற்றும்போது உயிரிழந்த முஸ்லிம்களின் விதவைத் தாய்மாருக்கும், மனைவி, மக்களுக்கும் அரசு காணிகளை வழங்கவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசிய அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன இரத்தினச் சுருக்கமாகப் பதில் அளித்தார்.

செல்வந்தர்களுக்குக் காணி வழங்குவது எமது நோக்கம் அல்ல. அதே வேளை, காணிகள் அற்றவர்களை காணிச் சொந்தக்காரர்களாக்கி செல்வந்தர்களாக மாற்றுவதே ரத்ன பூமித் திட்டம்.

காணிக் கச்சேரிகள் நடைபெறும் போது ஏதாவது முறைகேடுகள் இடம்பெற்றால், அவற்றை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினால் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதி அளித்தார்.

இறுதியாக வெளிவிவகார அமைச்சு தொடர்பான விவாதம் இடம்பெற்றது. எதிர்க்கட்சியினர் வழமை போல் அரசின் வெளிநாட்டுக் கொள்கையை விமர்சித்தனர்.

அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன. (ஐ)

# கணக்காளர்

பதவிக்கான போட்டிப் பரீட்சை
பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 20-12-2003 (3மணி)
(எமது கல்லூரியில் M.Com கற்பிக்கும் விரிவுரையாளர்கள் இப்பயிற்சி நெறியை நடத்துவார்கள்.)

**புதிய உயர் கல்லூரி**
**ஆரியகுளம் சந்தி - யாழ்.** 26-12-18-25)

(25976)

# அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு

முதல் தடவையாகத் தமிழீழத்தில் உள்ள எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கிய பெண்களுக்கான தடகள பெருவிளையாட்டுப் போட்டி எதிர்வரும் 05.03.2004 கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே பெண்களுக்கான தனித்துவமாக நடைபெறும் முதலாவது போட்டியும் இதுவாகும். மாவட்ட ரீதியாக வீராங்கனைகள் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதுடன், போட்டியில் கலந்துகொண்டு வெற்றியீட்டுகின்ற மாவட்டங்களுக்கும் வீராங்கனைகளுக்கும் பெறுமதி வாய்ந்த பரிசில்களும் பதக்கங்களும் வழங்கப்படும். என்பதுடன், மேற்படி விடயம் சம்பந்தமான விவரங்களிற்கு தங்கள் தங்கள் மாவட்ட விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர்கள், மாவட்ட மகளிர் பொறுப்பாளர்களுடன் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஏற்பாட்டவை,
அரசியல்துறை மகளிர்,
கிளிநொச்சி,
தமிழீழம்.

(25978)(35-12-18-25)

# யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
## விடுதியில் தங்கியிருந்து கல்விகற்கும் மாணவர்களுக்கான அனுமதி - 2004

மேற்படி மத்திய மகா வித்தியாலய ஆண், பெண் மாணவர் விடுதிகள் புனரமைக்கப்பட்டு மீண்டும் 2004 ஜனவரி முதல் இயங்கவுள்ளமையால் பாடசாலை விடுதியில் தங்கியிருந்து கல்விகற்க விரும்பும் மாணவர்களுக்கான அனுமதி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

முதலில் ஆண்களுக்கான விடுதியும் அதன் பின்னர் பெண்களுக்கான விடுதியும் ஆரம்பிக்கப்படும். தரம் 6 முதல் தரம் 12 வரையான வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

தரம் 6,7 ஆங்கிலமொழிமூலமான வகுப்புகளுக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளலாம்.

(C/32089)(35-12-18-25) - அதிபர்.

"ஓம் நமசிவாய வாழ்க நாதன்தாழ் வாழ்க"



# ஸ்ரீ செளந்தராம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேசசுவாமி
## தேவஸ்தான மண்டலாபிஷேக பூர்த்தி விஞ்ஞாபனம்
# ஈழத்துச் சிதம்பரம்
## திண்ணபுரம் - காரைநகர்

மெய்யடியார்களே!

நிகழும் சுபானுவருடம் மார்கழித் திங்கள் 4 ஆம்நாள் 19.12.2003 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு மண்டலாபிஷேக பூர்த்தியை முன்னிட்டு சிவனுக்கு சகஸ்ர சங்காபிஷேகம் (1008) அம்பிகைக்கும் ஐயனாருக்கும் அஷ்டோத்தர சத (108) சங்காபிஷேகம் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு ஸ்னபனா அபிஷேகம் என்பன நிகழத் திருவருள் கூடியுள்ளது.

**கிரியா கால விவரம்:**

| | | |
|---|---|---|
| மார்கழி 3 (18.12.2003) வியாழன் | காலை 9.00 மணிமுதல் | கணபதி வழிபாடு<br>பூர்வாங்க கிரியைகள் கடஸ்தாபனம் 1ஆம் கால யாகபூஜை |
| | மாலை 5.00 மணி | 2ஆம் கால யாகபூஜை ஹோமங்கள் |
| மார்கழி 4 (19.12.2003) வெள்ளி | காலை 8.00 மணி | யாகபூஜை பூர்ணாகுதி விசேட தீபாராதனை |
| | 9.00 மணி | அபிஷேகம் ஆரம்பம் |
| | 11.00 மணி | கும்பங்கள் அபிஷேகம்<br>தொடர்ந்து விசேட பூஜை,<br>மகேஸ்வர பூஜை என்பன இடம்பெறும். |
| | மாலை 5.00 மணி | திருக்கல்யாணம்<br>விசேடபூஜை திருவூஞ்சல் |
| | 7.00 மணி | அலங்கார பூந்தண்டிகையில்<br>பிரபல தவில், நாதஸ்வரகலைஞர்களின்<br>இசைவேள்வியுடன் பஞ்சமூர்த்திகள் திருவீதி உலா. |

மெய்யடியார்கள் அனைவரும் மண்டலாபிஷேக நிகழ்வில் கலந்துகொண்டு
எம்பெருமானின் திருவருளைப்பெற்று ஏகுமாறு
கேட்டுக்கொள்ளுகின்றோம்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

ஈழத்துச் சிதம்பரம்,
திண்ணபுரம்,
காரைநகர்.

**ஆதீன கர்த்தாக்கள்:**
**ஆ.அம்பலவி முருகன்,**
**இ.சுந்தரலிங்கம்.**

(விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.)

அற்புதா ரேடிங் கொம்பனி,
198, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-32090)) (25-12-18)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியில் நீண்டகாலம்
ஆங்கில ஆசானாகக் கடமையாற்றி
சேவையிலிருந்து ஓய்வுபெற்ற
பின்னரும் பகுதிநேர ஆங்கில
ஆசிரியராகக் கடமையாற்றிய

**வே.இராசரத்தினம்**

அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு, அவரது ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

யா/அச்சுவேலி புனித தெரேசாள்
மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசார ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி-32082) (26-12-18-25)

# மரண அறிவித்தல்
## வேலுப்பிள்ளை இராசரத்தினம்

(ஆசிரியர் - யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)

பிறவுண் றோட், நீராவியடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி, இராச வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசரத்தினம் அவர்கள் திங்கட்கிழமை (15.12.2003) காலமானார்.

அன்னார் நீராவியடியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் அச்சுவேலியைச் சேர்ந்த தனேஸ்வரி (ஆசிரியை-யா/அச்சுவேலி மத்திய கல்லூரி) அவர்களின் பாசமிகு கணவரும் துஸ்யந்தன்(கொழும்பு பல்கலைக்கழகம்), கிரிசாந்தன்(B.C.S. கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இராசையா மற்றும் செல்லையா, சரஸ்வதி, பாலசிங்கம், அருளானந்தம்(U.K.) காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கெந்தீஸ்வரன், தனபாலகிருஷ்ணன் மற்றும் பரமேஸ்வரி, நகுலேஸ்வரி (கனடா), விமலேஸ்வரி(கனடா), அருந்தவராசா(கனடா), எதிர்வீரசிங்கம்(கனடா) ஜெகதீஸ்வரி(கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2003) வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்சுவேலி வல்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராச வீதி,*
*அச்சுவேலி.*

*தகவல்:*
இ. தனேஸ்வரி
(மனைவி).

(C/32081)(35-12-18-25)

6 ஆம் தர மாணவர்களுக்கு அறிமுகமாகும்

# பல்தேர்வு பாடநூல் தொடர்பாக கல்வி அதிகாரிகள் கூடித் தீர்மானம்

வலி.தெற்கு,டிசெ.18

2004ஆம் ஆண்டு ஆறாம் தர மாணவர்களுக்கென புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள பல்தேர்வு பாடநூல் தொடர்பாக வடக்கில் உள்ள சகல பாடசாலைகளும் ஒரே புத்தகத்தையே பாடநூலாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் ஆசிரிய ஆலோசகர்களும் கூடி முடிவெடுத்துள்ளனர்.

2004ஆம் ஆண்டு அமுலுக்குக் கொண்டுவரப்படவுள்ள கருப்பொருள் மையப் பாடப் பிரவேச பாடத்திட்டத்துக்கமைவாக தமிழ்மொழியும் இலக்கியமும், கணிதம் ஆகிய பாடங்களில் பல்தேர்வு நூல்களாக மூன்று புத்தகங்களை பாடநூல் வெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் தமது ஆசிரியர் குழுவுடன் இம்மூன்று புத்தகங்களையும் கருத்தூன்றி ஆராய்ந்து எந்த நூல் தமது பாடசாலை மாணவர்களுக்கு பொருத்தமானது எனவும், எத்தனை புத்தகம் தேவைப்படும் எனவும் தமக்கு அறிவிக்குமாறும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு, வலயக்கல்விப் பணிப்பாளர்களூடாக பாடசாலை அதிபர்களுக்கு ஏற்கனவே அறிவித்திருந்தது.

இதற்கிடையே - கடந்த வாரம் வடக்கில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சகல வலயக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் கிளிநொச்சி கல்வி வலயப் பணிமனையில் ஒன்றுகூடி இதுதொடர்பாகக் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலின்போது வடபகுதி முழுவதும் உள்ள பாடசாலைகளில் கணிதம், தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய பாடங்களுக்கு ஒரே பாடநூலையே பயன்படுத்த வேண்டும் எனத் தீர்மானித்து தேசிய கல்வி நிறுவனத்துக்குத் தமது முடிவினை அறிவித்துள்ளனர்.

ஒவ்வொரு பாடசாலையும் வெவ்வேறு பாடநூல்களை பயன்படுத்தும்போது ஒரு பாடசாலையில் இருந்து வேறு பாடசாலை ஒன்றுக்கு மாறிச் செல்லும் மாணவன் ஒருவன் அங்கு வேறொரு வகை நூலைக் கற்கவேண்டிய நிலை ஏற்படலாம். இது மாணவரின் முன்னேற்றத்துக்குத் தடையாக அமையலாம் என்ற கருத்தை வலியுறுத்தி சகல பாடசாலைகளும் ஒரே பாடநூலைப் பயன்படுத்த வேண்டுமென தீர்மானித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தின் போது பல்பாடநூல் தேர்வுக்காக வெளியிடப்பட்டுள்ள மூன்றுவகை நூல்களில் காணப்படும் சிறப்பு அம்சங்கள் ஆராயப்பட்டு புள்ளிகள் இடப்பட்டு மிகக் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற புத்தகத்தை பயன்படுத்த அனுமதிக்குமாறு தேசியக் கல்வி நிறுவனத்துக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நசிதம்பரநாதன் எழுதியுள்ள தமிழ்மொழியும் இலக்கியமும் பாடநூலும், கே.கருணாரத்தினவும் புதல்வர்களும் எழுதியுள்ள கணிதம் பாடநூலும் கூடிய சிறப்பு அம்சங்களை கொண்டிருப்பதாகக் காணப்பட்டு சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

ஏனைய இருபாட நூல்களையும் மேலதிக பயிற்சிகள் தேவைப்படும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயனுள்ளவையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடபகுதி உயர்கல்வி அதிகாரிகள் கூடி வடக்குக்கு உரிய நூல்களை தெரிந்து எடுத்ததுபோல கிழக்குப் பகுதி அதிகாரிகளும் அங்குள்ள பாடசாலைகளுக்குரிய பொதுவான நூல்களை தெரிந்தெடுப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-157)

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவில்

# துரித அபிவிருத்தித் திட்டத்துக்கு ஆலோசனை பெறக் கூட்டம்

வலி.மேற்கு,டிசெ.18

யாழ். மாவட்டத்தில் 2004ஆம் ஆண்டு மேற்கொள்ளவுள்ள துரித அபிவிருத்தித்திட்டத்துக்கு திட்டங்களை சமர்ப்பிப்பதற்காக வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் சமூகமட்ட பொது அமைப்புகளுக்கான கூட்டம் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகனறாஸ தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கான சகல ஏற்பாடுகளையும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கேதீஸ்வரராசா மேற்கொண்டுள்ளார்.

பிரதமரின் பணிப்பிற்கிணங்க யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செயதிருநாதன் இது தொடர்பாக சுற்றறிக்கை ஒன்றினை சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

இடம்பெயர்ந்த, மீள்குடியமர்ந்த மக்களின் அவசிய தேவைகளை இனங்காணுதல், அவற்றை ஈடுசெய்தல் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான துரித அபிவிருத்தித் திட்டங்களை சமூகமட்ட அமைப்புக்களின் மூலம் தயாரித்து அனுப்பிவைக்குமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு கிராமமுன்னேற்றச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கடற்றொழில் சங்கங்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளை தவறாது கலந்துகொள்ளுமாறு திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வலிமேற்கு பிரதேச துரித அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும் ஆலோசனைக் கூட்டத்திற்கு வருகை தரும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் தத்தமது கிராமங்களில் உட்கட்டமைப்பு நிலையை நீக்குவதற்கான திட்டங்களை துறைசார்ந்த அதிகாரிகளின் சிபார்சுகளுடன் சமர்ப்பிப்பதற்குத் தயாராக வருகைதருமாறும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-175)

## கே.ஏ.சுப்பிரமணியத்தின் நினைவுதினக் கூட்டம்

கொழும்புத்துறை, டிசெ.18

சமூகவிடுதலைக்கும், சமூக மாற்றத்திற்கும் பணியாற்றி மறைந்த தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 14ஆவது ஆண்டு நினைவு தினக் கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 4மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற அதிபர் மு. தியாகராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'பேச்சுவார்த்தையின் இடைநிறுத்தமும் அரசியல் எதிர்காலமும்' என்னும் பொருளில் புதிய ஜனநாயகக்கட்சி செயலாளர் சி.கா. செந்திவேலும் 'உலகமயமாதலின் கீழ் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்கள்' என்னும் தலைப்பில் சட்டத்தரணி இ.தம்பையாவும் உரை நிகழ்த்துவர். (ஐ-30)

## காலத்தின் பதிவு



காலம் நம் கையில்....

படம்: தேவா

# விநாயகமூர்த்தி எம்.பிக்கு சேவைநலன் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.18

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் சேவை நலன் பாராட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விரிவுரையாளர் அ.குமாரவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அருட்தந்தை சி.ஜீ.ஜெயக்குமார் மற்றும் அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

சமூக அபிவிருத்தி அமைச்சர் டெ.சந்திரசேகரன் சிறப்புரையாற்றுவார். நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, மனோ கணேசன் மற்றும் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் உபதலைவர் கலாநிதி ந.குமரகுருபரன் ஆகியோர் பாராட்டுரைகளை வழங்குவர். (ஐ-5)

# செய்திக் கொத்து

## கூட்டம்

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு பிரதேச சபையின தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் இதில் ஆராயப்படவுள்ளதால் நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சபையின் செயலாளர் கேட்டுள்ளார். (ஐ-10-170)

## தபாலகத்துக்கு கட்டடம்

மானிப்பாய் தபால் நிலையத்துக்குச் சொந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

கட்டடம் அமைப்பதற்குரிய காணியைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய முயற்சியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஈடுபட்டுள்ளார் என்று பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ-10-185)

## ஒலிபெருக்கி சாதனங்கள் திருட்டு!

சண்டிலிப்பாய்,டிசெ.18

பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத்தின் ஒலிபெருக்கிச் சாதனங்கள் கடந்த புதன்கிழமை திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக ஆலய பங்குச்சபையினர் இளவாலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேபோன்று சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தின் ஒலிபெருக்கிச் சாதனங்களும் கடந்தமாதம் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10-135)

## சைக்கிள் திருட்டு!

தெல்லிப்பளை,டிசெ.18

கடும்நோயால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும் தனது தாயாரை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்குச் சைக்கிளைத் தருமாறு மாணவன் ஒருவரின் புதிய சைக்கிளைப் பெற்றுச் சென்ற நபர் சைக்கிளுடன் மாயமானார்.

நவாலியைச் சேர்ந்த கிருபாகரன் சுதன் என்ற மாணவனே சைக்கிளை இழந்தவராவார். இது தொடர்பாக மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-10-150)

## மின் தடை!

நவாலி,டிசெ.18

நவாலிப் பகுதியில் இரவு வேளைகளில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால் அப்பகுதி மக்கள் பெரிதும் சிரமப் படவேண்டியுள்ளது.

குறிப்பாக சின்னப்பா வீதியில் இரவு 7மணிக்குப் பின்னர் மின்சாரம் தினமும் தடைப்படுவதாகக் கூறப்படுகிறது. (ஐ-10-100)

## சந்தையில் புதிய கடைகள்

சாவகச்சேரி,டிசெ.18

சாவகச்சேரி பொதுச் சந்தையில் அண்மையில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கடைகள் சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சந்தையின் உட்பகுதியில் ஏற்கனவே கடைகளை நடத்தியவர்களுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன. முன்னர் உட்பகுதியில் இருந்த கடைகள் 2000ஆம் ஆண்டு மோதும் குடா நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தின் போது அழிவுண்டன. (ஐ-10-31)

## போக்குவரத்து இடைஞ்சல்

வலி.தெற்கு,டிசெ.18

மருதனார்மடம் சந்தியை அண்டித்த வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து அதிகரித்துள்ள நேரங்களில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

காலை வேளையில் சந்தைக்கு வருவோரும் தமது வாகனங்களை வீதியோரம் நிறுத்தி வைப்பதால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயநிலையும் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-10-152)

## வயோதிபர் காயம்!

யாழ்ப்பாணம்,டிசெ.18

சைக்கிளில் சென்ற வயோதிபர் பஸ்ஸினால் மோதுண்டதில் காயமடைந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஊரெழுவைச் சேர்ந்த எஸ்இராசசிங்கம் (வயது 76) என்பவரே காயமடைந்தவராவார். (ஐ-10-6)

## மணல் அகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.18

குடாநாட்டில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஹர்த்தாலைச் சாதகமாகப் பயன்படுத்தி அரியாலைப் பகுதியில் பல உழவு இயந்திரங்கள் மணல் அகழ்ந்து சென்றதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஹர்த்தாலை ஒட்டி சன நடமாட்டம் குறைந்திருந்ததால் மணலை எடுத்து வந்து ஒழுங்கைகள் மற்றும் வீதி ஓரங்களில் பறித்துவிட்டு மறுநாள் அதிகாலை வேளையில் மீண்டும் ஏற்றிச் சென்றனர் என்று மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-10-86)

## போதனாசிரியர் நியமனம்

வரணி,டிசெ.18

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த செல்வி கிருத்திகா கந்தசாமி காணி அமைச்சின் வெளிக்கள போதனாசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி பூநகரி பிரதேச செயலகத்தில் இவர் தனது கடமையை ஏற்றுக்கொண்டுள்ளார். (ஐ-10-170)

இதுவரை பருத்தித்துறையில் இயங்கிய

# எழுதுமட்டுவாழ் அஞ்சலகம் கொடிகாமத்துக்கு மாற்றம்

தென்மராட்சி,டிசெ.18

கடந்த மூன்று வருடங்களாக பருத்தித்துறையில் இயங்கிவந்த எழுதுமட்டுவாழ் உபஅஞ்சல் அலுவலகம் அடுத்த வாரம் முதல் கொடிகாமம், கச்சாய் வீதியில் உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உபஅஞ்சல் அலுவலகத்தினால் தபால் விநியோகம் மேற்கொள்ளப்படும். எழுதுமட்டுவாழ வடக்குப் பகுதி மக்கள் தமது சொந்த இடங்களிலும் ஏனைய பகுதி மக்கள் தென்மராட்சி கிழக்குப் பகுதியிலும் தங்கியுள்ளதால் தபால் நிலையத்தைக் கொடிகாமம் பகுதியில் செயற்படவைக்கத் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-117)

# ஆவணங்கள் தவறிவிட்டன கண்டெடுத்துத் தருவோருக்கு சன்மானம்

கடந்த 05.12.2003 வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து யாழ். வந்த கந்தசாமி செல்வராசா என்பவரின் பேர்ஸுடன் பல ஆவணங்கள் முகமாலைக்கும் யாழ்ப்பாணம், கல்வியங்காடு – தமது வீட்டுக்கும் – இடையில் தவறிவிட்டன. அதில் வெளிநாட்டு விஸாகாட், வங்கி அட்டை, அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வேலை அட்டை (JOP CARD) என்பன உள்ளன.

குறிப்பு : பிரான்ஸிலிருந்து தந்தையின் திவசக்கடமை செய்ய வருகை தந்தவர் ஆவணங்கள் தவறவிட்டமையால் மீண்டும் பிரான்ஸ் செல்ல தடங்கலாகியுள்ளது. எனவே, இதைக்கண்டெடுத்தவர்கள் மனிதாபிமான உள்ளத்துடன் ஒப்படைத்து உதவும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் இவற்றை ஒப்படைத்து உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானமும் வழங்கப்படும்.

(தகவல் தருபவர் பொருளைத் தொலைத்தவரின் மைத்துனர்)

ஆவணங்களை அனுப்பிவைக்க நேரில் வரமுடியாவிடின் தொலைபேசியில் தொடர்பு செய்யுங்கள்.
T.P.: 071 2501591.

தகவல்:
செ.ஸ்ரீ சந்தணராசா
அம்பிகாவத்தை வீதி,
சங்கானை.

(25991)(31-18-36)

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

மலர்வு 26 – 11 – 1937



உதிர்வு 28 – 12 – 2002

**அமரர் முத்து தனபாலசிங்கம்**

திதி: 18.12.2003

இன்று (18.12.2003) வியாழக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு அமரரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆனைக்கிணற்றடி,
கொற்றாவத்தை. (25984)(35-18-31) - குடும்பத்தினர்.

விராட் விஸ்வப் பிரமனே நம

# 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 1935 – 01 – 08



உதிர்வு 2003 – 11 – 28

**அமரர் விஸ்வகுலதிலகர் வல்லிபுரம் துரைராசா**

அன்பின் சிகரமாய் பாசத்தின்
உறைவிடமாய் வாழ்ந்து
வந்த எங்கள் ஐயாவே!
எப்பிறவியில் உங்கள் தரிசனம்
இனி எங்களுக்கு ஐயா.

எங்கள் அன்புத் தந்தையின் மறைவுச் செய்திகேட்டு எமது துயரத்தில் கலந்துகொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (18.12.2003) வியாழக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.7, காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (25986)(25-18-31)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## திருச்சொரூபம் திருட்டு!

வடமராட்சி,டிசெ.18

புலோலி புனித சூசையப்பர் ஆலயத்திலிருந்த சுமார்150 வருடங்கள் பழைமை வாய்ந்த திருச்சொரூபம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பட்டப்பகலில் திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆலய நிர்வாகிகள் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஐ-173-5)

## உயிரூட்டல் குழுக்கள் அமைப்பு

'கியூடெக்' நிறுவன உயிர்ப்பூட்டல் குழுவினரால் கிராமங்கள் தோறும் சிறு குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கைதடி, நாவற்குழி தெற்கு, குட்டியப்புலம் போன்ற இடங்களில் இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய இடங்களிலும் விரைவில் இக்குழுக்கள் அங்குரார்ப்பணம் செய்யப்படும்.

கிராமியப் பெண்களிடம் பொருளாதார ரீதியான சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் நோக்குடனேயே இக்குழுக்கள் அமைக்கப்படுவதாக 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட்திரு. சி.ஜெ.ஜெயக்குமார் தெரிவித்தார். (ஐ-30)

## வீடு விற்பனைக்கு

யாழ். ஆரியகுளம் சந்தியில் 4பரப்புக் காணியும் பழைய வீடும், கோப்பாய் கிழக்கு சாஜி இல்லம் அருகில் 14 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: T.P.0602213492. (25985) (26)

## தவறிவிட்டது

NPHH 6286 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் வாகன அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வாகன அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் அடங்கியவை 12.12.2003 அன்று பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

மதுஷன் தொலைத்தொடர்பகம்,
யாழ் வீதி, உடுப்பிட்டி.
TP-021-2263468 (25992)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 27 02 1956



உதிர்வு 18 11 2003

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஈவினையை வதிவிடமாகவும் கொண்ட

**திருமதி வசந்தகுமாரி யோகலிங்கம்**
**(உப அதிபர், யா/ஈவினை அ.த.க.பாடசாலை)**

என்றும் உம் நினைவுகளோடு நாம் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (18.12.2003) வியாழக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் நிகழ்கின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புன்னாலைக்கட்டுவன்
தெற்கு. (25090)(32-18-31-36) – குடும்பத்தினர்.


GREEN CARDS
அமெரிக்கா லொத்தர் - VISA

அமெரிக்கா செல்லும் அதிர்ஷ்ட வாய்ப்பு
★ இன்னும் சில நாள்கள் மட்டுமே!

மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

SRI MURUGAN
Computer Systems Communication
Services & Agency Post Office,
303, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 2670 . Fax: 021 222 3214
E-Mail-del- smskn @ evreka.lk.

THIRUMURUGAN COM NET,
Computer Systems Communications Services.
46, Adiyapatham Rd.
Thirunelvely,
Tel:021 222 7310.
Fax: 021 222 7310.

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 535 |
|---|---|
| திகதி | 16.12.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4398015 - 4413147

வெற்றி இலக்கங்கள் 15 18 33 37



லக்கினம்
மிதுனம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 1,000,000/-
வெல்லப்பட்டது.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 335,770 | 10 | 3,357,700 |
| 2 இலக்கங்கள் | 30,833 | 20 | 616,660 |
| 1 இல + லக்கினம் | 30,667 | 30 | 920,010 |
| 2 இல + லக்கினம் | 2,792 | 100 | 279,200 |
| 3 இலக்கங்கள் | 814 | 500 | 407,000 |
| 3 இல + லக்கினம் | 77 | 5,000 | 385,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,000,000 | 1,000,000 |
| மொத்தம் | 400,957 | - | 7,265,570 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.7,265,570/-

தொடர் இல. 5388264க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 டிசம்பர் 19ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
4408246-8-57
4408352-7-78
4405556-7-30
4404490-6-66
4398877-1-53

PHOENIX OGILVY

# இதோ இன்று முதல் யாழ் மக்களுக்கு சன்குவிக் பழரசம்

பல்வகை பழங்களினால் அவற்றின் தரச் சுவைக்கேற்ப
தயாரிக்கப்பட்டுள்ள இச் சன்குவிக் பழரசம் இன்று முதல் உங்கள் மண்ணில்.



sunquick அதிக பழங்கள் அதிக கோப்பைகள்


உங்கள் கால்களுக்கு
சக்கரங்களாகும்
காரிலோ அல்லது ஜீப்பிலோ, சைக்கிளிலோ அல்லது பஸ்ஸிலோ, அல்லது நடந்தோ எப்படி நீங்கள் போனாலும்... வனப்புடன் பள்ளிக்கூடம் போகலாம் வரலாம்.
இலவசம்!
SUPERSPORT
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பாடசாலைப் பாதணியுடனும் 4 கணித உபகரணங்கள் அடங்கிய பொதியும் 8 பெயர் அட்டைகளுடனான ஒரு நேரசூசியும் இலவசம்.
ரூ. 499.90 இற்கு மேல் 64-383
ரூ. 499.90 இற்கு மேல் 58-281
ரூ. 369.90 இற்கு மேல் 68-643
ரூ. 519.90 இற்கு மேல் 52-311
ரூ. 499.90 இற்கு மேல் 64-373
DSI
SUPERSPORT
உங்கள் வகுப்புத் தோழன்
இச்சலுகை கையிருப்பு முடியும்வரை மட்டும்.
நாடு முழுவதிலுமுள்ள எல்லா DSI காட்சியறைகளிலும் விற்பனை முகவர்களிடமும் கிடைக்கும்.

# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
திருமதி க.நாவலன் அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி மாரிமுத்து புண்ணியமூர்த்தி**
அவர்கள் சிவபதம் அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும் சகல நலன் புரிச்சங்க
அங்கத்தவர்களும்,
நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
(25993) (32-14-17) வலி.வடக்கு, தெல்லிப்பழை.



# 61 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது செயலகத்தில் கடமைபுரியும்
திரு.ச.ஜெயபாலச்சந்திரன் அவர்களின்
*அன்புத் தாயார்*
திருமதி
**சந்திரசேகரர் ஜெகசோதியம்மா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆறுதல்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம்,*
*தென்மராட்சி*
(C-32100)(32-14-17)
**பிரதேச செயலரும்,**
**உத்தியோகத்தர்களும்**



# மாணவர் உதவிப்பணக் கொடுப்பனவு
## Bursary Payment

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களுக்கான கொடுப்பனவுகள

கல்வி ஆண்டு 2002/2003 - 7 ஆம் பட்டியல்
கல்வி ஆண்டு 2002/2003(A) - 2 ஆம் பட்டியலில்


மாணவர் உதவிப்பணத்திற்குத் தெரிவானோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இலங்கை வங்கிக்கிளையில் 16.12.2003 ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களை பல்கலைக்கழக விளம்பரப்பலகைகளில் பார்வையிடலாம்.

உதவிப்பதிவாளர், நலச்சேவைகள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்
(சி-32104)(36-16-17-32)



கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்
# அப்பாத்துரை விநாயகமூர்த்தி
## அவர்களின் சேவைநலன் பாராட்டுவிழா



*காலம் : 19.12.2003 வெள்ளிக்கிழமை*
*நேரம் : பிற்பகல் 4.00(பி.நே.)*
*இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்*

பிற்பகல் 3.00 மணிக்கு விழாநாயகரை அன்பர்கள், நண்பர்கள் அணிசேர மங்களவாத்தியம் சகிதமாக யாழ்.சிவன்கோவிலடியிலிருந்து வீரசிங்கம் மண்டபத்திற்கு அழைத்துச்செல்லுதல்.

தலைவர்:
திரு.அ.குமாரவேல்
பிரதம விருந்தினர்:
மாண்புமிகு பெ.சந்திரசேகரன்
நா.உ., சமூகசேவைகள் அமைச்சர்
நிகழ்ச்சிநிரல்
★ வரவேற்புரை:
திரு.ஆர்.இ.ஆனந்தராசா
★ ஆசியுரைகள:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
அருட்தந்தை சி.ஜே.ஜெயக்குமார்,
அருட்கவி திரு.சி.விநாசித்தம்பி M.A.
★ தலைமையுரை :
திரு.அ.குமாரவேல் B.A.
★ பாராட்டுரைகள்:
கலாநிதி ந.குமரகுருபரன்
கௌரவ மாவை சேனாதிராசா (நாடாளுமன்ற உறுப்பினர்)
கௌரவ மனோகணேசன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
★ பிரதம விருந்தினர் உரை
மாண்புமிகு பெ.சந்திரசேகரன் (நா.உ.)
★ வாழ்த்துரைகள்
பேராசிரியர் கலாநிதி பொன்.பாலசுந்தரம்பிள்ளை,
விகடகவி திரு.மு.திருநாவுக்கரசு,
செஞ்சொற்செல்வர் திரு.ஆறு.திருமுருகன்
மலர் வெளியீடு
வெளியீட்டுரை
கலாநிதி சி.சிவலிங்கராஜா
முதற்பிரதி வழங்குதல்
சிறப்புப் பிரதிகள் வழங்குதல்
★ பாராட்டுக்கவிதை:
செல்வன் ந.ஐங்கரன்
★ வாழ்த்துப்பாமாலைகள் வழங்கல்
★ ஏற்புரை:
விழாநாயகர்
★ நன்றியுரை
★ கலைநிகழ்ச்சி
வயலின் இசை
திரு.அ.ஜெயராமன் குழுவினர்
நாச்சிமார் கோவிலடி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
விழா ஏற்பாட்டுக்குழு.
(26001)(32-16-17)


# தீயில் சிக்கி சிறுவன் காயம்!

யாழ்ப்பாணம்,டிசெ.18

வீட்டில் யாருமற்ற நேரம், குப்பைகளுக்குத் தீமூட்டி விளையாடிய சிறுவன் தவறுதலாக அதனினுள் விழுந்து உடல்பூராகவும் தீப்பற்றி எரிந்து காயமடைந்தார்.

காரைநகர் முள்ளிப்பாத்தி என்ற இடத்தில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் நடராசா ஜனகரன் (வயது-12) என்ற சிறுவனே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-6-7-15)

# எழுவைதீவுக்கான தபால்விநியோகத்தில் முன்னேற்றம்

ஊர்காவற்றுறை,டிசெ.18

எழுவைதீவுப் பிரதேசத்திற்கான தபால் விநியோகம் இம்மாத ஆரம்பம் முதல் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் யாழ். நகரில் இருந்து எழுவைதீவிற்கு முகவரியிட்டு அனுப்பிவைக்கப்படும் கடிதங்கள் மறுநாள் மாலையே எழுவைதீவை வந்தடைந்தன.

எனினும், மேற்படி பிரதேச தபாலதிபர்கள் மேற்கொண்ட முயற்சியினால் தபால் விநியோகம் விரைவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தினசரி காலை 9.30 மணிக்கு எழுவைதீவை வந்தடையும் தபால்கள் அன்றைய தினமே உரியவர்களுக்கே விநியோகிக்கப்படுகின்றன. (எ-16)

# முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறுமென முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி திருமதி வெ.அமிர்தாம்பிகை கேட்டுள்ளார். (எ)

# போதையில் ரகளை புரிந்த இருவர் கைது!

கொடிகாமம் நகர்ப்பகுதியில் மது போதையில் நின்று பொதுமக்களை தகாத வார்த்தைகளால் ஏசிய இருவரை கொடிகாமம் பொலஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர் எனக் கூறப்பட்டது. (எ-117)


**நாகம்ஸ் சுன்னாகம்**
விக்ரம், ஜோதிகா மற்றும்
ரீமாசென் நடித்த
**தூள்** (ரீல்லை)
தினசரி காட்சி : 11.00, 3.00, 7.00. (பி.நே.)
நாளை முதல்
காக்க காக்க
(C-31690) (12)

**லஷ்சுமி சினிமா** இணுவில்
விஜய், ஜோதிகா
மற்றும் விவேக் நடித்த
**குஷி** (ரீல்லை)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பி.நே.)
(25943)(32)

**லிபேட்டி** அச்சுவேலி
மாதவன், ஜோதிகா ஸ்ரீதேவி
மணிவண்ணன்
நடித்த
**பிரியமான தோழி** (ரீல்லை)
காட்சிநேரம்: 3.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 3.00, 7.00 (பி.நே.)
(C-31631)(12)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
இன்று முதல் ரஜனி, ரோஜா, மீனா
நடித்த
**வீரா** (ரீல்லை)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு JACKIE CHAN நடித்த
WHO AM I (கராட்டிப்படம்)
இரவு 9.45 இற்கு (பி.நே.)
(C-31619) (32)

**ராஜா** யாழ்ப்பாணம்
தருண், த்ரிஷா,
விவேக், மணிவண்ணன்
நடித்த
**எனக்கு 20 உனக்கு 18** (ரீல்லை)

இசை
A.R. ரஹ்மான்
காட்சிகள்:
10.30,2.30,6.30,9.30 (பி.நே.)
ஆசனங்களை முன்கூட்டியே
பதிவுசெய்துகொள்ளலாம்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வராணி இராசதுரை

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்.வண்ணை கேசாவில் வீதியை,புகுந்த இடமாகவும் தென்னிந்தியா, திருச்சி, 23,சுப்பிரமணியபுரத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்வராணி இராசதுரை அவர்கள் நேற்று (17.12.2003) புதனன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் அல்வாயைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை-நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் வண்ணை பிரபல மெக்கானிக் இராசதுரை (அமரர்-இராசு) அவர்களின் அன்பு மனைவியும் அமரர்களான வண்ணை தில்லையம்பலம்-தங்கப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் ச.குணராணி, தங்கராணி (இந்தியா), உதயகுமார் (பிரான்ஸ்), சி.செல்வகுமாரி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகராசா(சுவிஸ்), சிவபாலன் (இந்தியா), திருமதி உ.மீனலோயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி ஆ.கமலாதேவி (திருநெல்வேலி), பாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்)ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் கனகரத்தினம், திருமதி தம்பாபிள்ளை சுபத்திரை, அருந்தவநாதன், திருமதி பா.ஞானமணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி க.நேசரத்தினத்தின் சகலியும் ச.யோகிதா, ச.யுகவேந்தன், ச.யுகரூபன், சி.விமேஸ், சி.ஷாமினி, சி.சயந்தினி, சி.சாளினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 32, சிவப்பிரகாசம் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
T.P.: 077 6154096
(சி-32103)(16-17-32)

*தகவல்:*
சண்முகராசா குணராணி
(மகள்)

## சின்னப்பா நடராசா
### (முன்னாள் லிகிதர், கென்டிசன் அன்கோ)

நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பா நடராசா அவர்கள் 16.12.2003 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் செல்லம்மா நடராசா (இளைப்பாறிய ஆசிரியை-கல்வயல் சண்முகானந்தா வித்தியாசாலை) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னப்பா (கிளாக்கர்)-அன்னமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற துரையப்பா (சிறாப்பர்), குமாரசாமி(முன்னாள் முகாமையாளர், தெய்வேந்திரா தியேட்டர்), பரமேஸ்வரி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவராசா (கனடா), சிவமோகனா, சிவகாம்பிகை, யோகேஸ்வரன் (அமெரிக்கா), ஜெகதாம்பிகை, சச்சிதானந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயந்தி (கனடா), சிவசுப்பிரமணியம் (யாழ்.மேல்நீதிமன்றம்), யோகராசா(மக்கள் வங்கி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆரணி (கனடா), தீபா (கனடா), நிரஞ்சி (நாவல பல்கலைக்கழகம்), நந்தபிரகாஷ் (வயம்பா பல்கலைக்கழகம்), பிரசாத், சுயன், நிலானி, மதனன், கேசவன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21-12-2003 ஞாயிற்றுக்கிழமை கந்தர்மடம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10.00மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*225 /6, பலாலி வீதி,*
*கந்தர்மடம் யாழ்ப்பாணம்.* (26003)(16-17-32)

தகவல்:
குடும்பத்தினர்

## சபாபதி பாலசிங்கம்

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி பாலசிங்கம் அவர்கள் நேற்று (17.12.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சபாபதி-கனகம்மாவின் இரண்டாவது மகனும் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் பாசமிகு கணவரும் நமசிவாயம், நகுலேஸ்வரி, சர்வேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயகௌரி, நகுலேசன், பூபாலசிங்கம் ஆகியோரின் மாமனும் நகுந்தன், ஜெனார்த்தனன், துஷ்யந்தினி, கயேன், சாலினி, கயிதன், பிரியா, தனு ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.* (26004)(16-17-32)

தகவல்:
மகன் பா.நமசிவாயம்
(கஜி வர்த்தக நிலையம்,
புன்னாலைக்கட்டுவன்)

## வேலுப்பிள்ளை யோகரட்ணம்(ரத்தினம்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் தெற்கு நவாலியூரை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை யோகரட்ணம் அவர்கள் கடந்த 15.12.2003 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (19.12.2003) வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக நவாலி கொத்துக் கட்டி கிறிஸ்தவ சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தெற்கு நவாலியூர்,*
*மானிப்பாய்.* (25995)(16-17-32)

தகவல்:
மனைவி

## திருமதி சின்னத்துரை கமலாதேவி

பத்தமேனி வைரவ கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை கமலாதேவி அவர்கள் நேற்று (17.12.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மயிலு கந்தையா மற்றும் பவளம் தம்பதிகளின் அன்பு மகளும் தனபாலசிங்கம், புஸ்பராணி, தனலட்சுமி, சிவனடி (பிரான்ஸ்), சிறிஸ்கந்தராஜா (கனடா), மகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சசிகரன் (பிரான்ஸ்), ஜெயபாகரன் (பிரான்ஸ்), சுதாகரன், கிருபாகரன ஆகியோரின் அன்புத் தாயாரும் வாணி (பிரான்ஸ்), கவிதா ஆகியோரின் மாமியும் பிரவீனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2003) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பத்தமேனி தீத்தக்குள மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தமேனி வைரவகோவிலடி,*
*அச்சுவேலி.* (25997)(16-17-32)

தகவல்:
க.தனபாலசிங்கம்
(சகோதரன்)

சம்பள முரண்பாடு குறித்து உரிய முடிவின்றேல்

# சுகாதாரச் சேவை ஊழியர்கள் மீண்டும் போராடத் தயாராகுகிறார்கள்

கொழும்பு,டிசெ.18

சுகாதார சேவை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கும் தீர்க்கமான தீர்மானமெதனையும் அமைச்சரவை மேற்கொள்ளாவிடின் இன்று எமது தொழிற்சங்க கூட்டமைப்பின் நிறைவேற்றுச்சபை கூடி எதிர்கால நடவடிக்கை குறித்து ஆராயும். இவ்வாறு சுகாதாரச் சேவை தொழிற்சங்க சம்மேளனத்தின் இணைப்பாளர் சமன் ரத்னபிரிய நேற்றுத் தெரிவித்தார்.

சுகாதாரச் சேவை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கி அதிகரித்த சம்பளத்தை ஒரே தடவையில் வழங்க வேண்டும். 1997ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவையின் 50சதவீதம் ஆறரை வருடங்களுக்குள் வழங்கப்படுமானால் அது குறித்து திருப்திபடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இது தொடர்பாக சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவிக்கையில், மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள சம்பள அதிகரிப்பை ஒரே தடவையில் வழங்குவது குறித்து ஆராய்ந்து பார்க்குமாறு அமைச்சரவைக்குப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 1997ஆம் ஆண்டு முதல் நிலுவையாகவுள்ள சம்பள நிலுவையை வழங்க வேண்டுமானால் 2000 கோடி ரூபாவை அரசு செலவிட நேரிடும். இவ்வளவுக்கு பெருந்தொகைப் பணத்தை ஏற்கமுடியாது. அத்தொகை ஆண்டொன்றுக்கு சுகாதாரச்சேவைக்கு ஒதுக்கும் முழுத் தொகைக்கும் சமமான தாகும் - என்றார்.

# சனசமூக நிலைய வாசலில் தொங்கிய மாட்டுத் தலை!

## அச்செழுப்பகுதியில் பரபரப்பு

அச்சுவேலி,டிசெ.18

அச்செழுப்பகுதியில் உள்ள சனசமூக நிலையம் ஒன்றின் முன்பாக மாடு ஒன்றின் துண்டிக்கப்பட்ட தலைப் பகுதி கட்டித் தொங்கவிடப்பட்டது. நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வேவிபுரம் கிராமப்பகுதியில் கசிப்பு உற்பத்தி, கால்நடைகளை அனுமதியின்றி இறைச்சிக்காக வெட்டுதல் போன்ற நடவடிக்கைகளை சனசமூக நிலையம் ஒன்றின் உறுப்பினர்கள் தடைசெய்திருந்தனர். இந்த நிலையில் மேற்படி சனசமூக நிலையத்தின் வாசலில் ஒருவர் மாட்டுத் தலை ஒன்றை கட்டித் தொங்கவிட்டார் என்றும் இதனை அவதானித்த சனசமூக நிலைய நிர்வாகிகள் அவரைப் பிடிக்க முற்பட்டபோது குறித்த நபர் அவர்களைத் தாக்கினார் என்றும், கூறப்படுகிறது. இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்தனர். அத்துடன், சனசமூக நிலைய வாசலில் தொங்கவிடப்பட்ட மாட்டுத் தலைக்கு உரிய உடற்பகுதியும் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஒ-8-11)

# நிரந்தர சமாதானம் உருவானால் துரித அபிவிருத்தியை ஏற்படுத்தலாம்

## திருமலையில் அமெரிக்கத் தூதுவர் கருத்து

கன்னியா,டிசெ.18

இலங்கையின் சமாதானத்திற்கும அபிவிருத்திக்கும் அமெரிக்கா தார்மீக ரீதியான உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றது. இந்த நிலையில் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதன் மூலம் இந்த நாட்டை துரித கதியில் அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்ல முடியும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லின்ஸ்ரட் கூறினார்.

திருகோணமலையில் யுஎஸ்எயிட் நிறுவன பணியகத்தை நேற்றுக் காலை திறந்துவைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பதிகாரி பேணற்றா தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் தொடர்ந்து பேசிய அமெரிக்கத் தூதுவர் கூறியதாவது:-

யுஎஸ்எயிட் நிறுவனத்தின் கிளைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆரம்பித்து வைக்கப்படுகின்றன. இந்த நிறுவனங்கள் இன, மத, பேதம் அற்ற முறையில் செயலாற்றி வருகின்றன.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை நான் பதவியேற்ற பின்னர் முதற்றடவையாக மேற்கொண்ட விஜயம் இதுவாகும். யு.எஸ்.எயிட் நிறுவனம் கடந்த ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து இதுவரை பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. இந்த வேலைத் திட்டங்கள் மிகவும் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுவதை அறிந்தேன். தொடர்ந்தும் இத்தகைய பணிகளை மேற்கொள்வோம்.

- இவ்வாறு அவர் கூறினார்.

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட் - யாழ்ப்பாணம்
புதிய பிரிவு
SPOKEN ENGLISH WITH GRAMMAR
Lectured:
By:NISHANTHAN
(Dip.in Eng.)
ஆரம்பம்: இன்று (18.12.2003)
வியாழன் 4.00 p.m. (ப.நே.)
பிரிவு I, பிரிவு II வழமையான
நேரப்படி நடைபெறுகின்றன.
(25996)

## தந்தை, மகளுக்கு நயினாதீவில் கத்தி வெட்டு!

யாழ்ப்பாணம்,டிசெ.18

நயினாதீவில் நேற்று இடம்பெற்ற கத்திவெட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்ததாகத் தெரிவித்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் நேற்றிரவு யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா பாலசுந்தரம் (வயது -46), அவரது மகளான பாலசுந்தரம் தீா (வயது-22) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இருவரும் நயினாதீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அயல்வீட்டாருடன், நீண்டகாலமாக நிலவிய பிணக்கே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் எனக் கூறப்பட்டது. (எ-7)

## யாழ். கட்டளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளைத் தளபதியாகவும் பதில் கட்டளைத் தளபதியாகவும் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றினார்.

2002ஆம் ஆண்டு ஒக்ரோபர் 25 ஆம் திகதி இவர் வன்னிக் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

இவர் தனது 30 வருட இராணுவ சேவையில் அமெரிக்காவில் இடம்பெற்ற பசுபிக் இராணுவ முகாமைத்துவக் கருத்தரங்கு, இந்தியாவில் இடம்பெற்ற சிரேஷ்ட கட்டளை அதிகாரிகளுக்கான கற்கைநெறி ஆகியவற்றில் கலந்துகொண்டார். மலேஷியாவில் உள்ள ஆயுதப்படை உத்தியோகத்தர்களுக்கான கல்லூரி, இந்தியாவில் உள்ள கட்டளை அதிகாரிகளுக்கான பொறியியல் கூட்டுக்கட்டளையகம் மற்றும் சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ள ஆயுதத் தளபாட அமைப்புக்கள் உட்பட பல இடங்களில் இராணுவக் கற்கை நெறிகளை மேற்கொண்டவர். பல வெளிநாட்டு இராணுவ மேற்பார்வைச் சுற்றுலாக்களிலும் இவர் பங்குகொண்டார்.

## ஜனாதிபதி பொறுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வரை இந்த மூன்று அமைச்சுக்கள் மீதும் சேற்றை வாரி வீசிக்கொண்டிருந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியினரும் நேற்று இவை தொடர்பாக மூச்சுவிடவில்லை. மாறாக ஆதரித்துப்பேசினர்.

ஊடகத்துறையின் நிதி ஒதுக்கீடுகள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டபோதும், பாதுகாப்பு, உள்துறை அமைச்சுகள் தொடர்பாக வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் கேட்டுக்கொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் இதனைச் சபையில் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, இந்த அமைச்சுகள் தொடர்பான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, மக்கள் முன்னணி ஜே.வி.பி, நு.ஆ என்பவற்றின் உறுப்பினர்களுடன் ஈ.பி.டி.பி உறுப்பினரான மதனராஜாவும் அரசுடன் இணைந்து ஆதரவாக வாக்களித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் 12 பேர் விவாதத்துக்கு எதிர்த்து வாக்களித்தனர். புளொட் அமைப்பைச் சேர்ந்த சித்தார்த்தன் சபையில் இருக்கவில்லை.

ஆதரவாக 137 வாக்குகளும், எதிராக 12வாக்குகளும் பெற்று பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் 125 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

## கூட்டணிச் செயற்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுதாரர்களாகக் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாப்பில் 16 (5) விதியின்படி, கூட்டணியின் தலைவரின் அனுமதியுடனேயே கூட்டணியின் செயலாளர் நாயகம் மத்திய செயற்குழுக் கூட்டத்தைக் கூட்ட முடியுமென்று மனுவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் 21ஆம் திகதி திருக்கோவிலில் கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தைக் கூட்ட எதிர் மனுதாரர்கள் மேற்கொண்டிருக்கும் தீர்மானம் தனது அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒன்றல்ல எனவும் ஆனந்தசங்கரி தனது மனுவில் கூறியிருக்கிறார்.

2003ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம திகதி கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் மனுதாரராகிய நானும் கலந்துகொண்டேன். இக்கூட்டத்தின் போது கட்சியின் தலைவரான எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

கட்சியின் பொதுச் செயலாளரான ஆர்.சம்பந்தன், கட்சியின் தலைவரை நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் அகற்றிவிட்டதாகவும் பத்திரிகைகளுக்கு அறிவித்திருந்தார்.

"தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்லர் என்ற எனது கூற்றை ஊடகங்கள் வெளியிட்டதையடுத்து கட்சியில் எனக்கு எதிரான உதாசீன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், எனது உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. என்னைத் தலைவர் பதவியிலிருந்து அகற்ற கட்சியின் ஒரு பிரிவினருக்கு விடுதலைப் புலிகள் அழுத்தம் கொடுத்திருக்கின்றனர்" எனவும் ஆனந்தசங்கரி தனது மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்.

மனுவை ஆதரித்து வாதாடிய ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷவின் வாதங்களை ஏற்றுக்கொண்ட நீதிபதி, டிசெம்பர் 21ஆம் திகதி கூட்டத்திற்குத் தடையுத்தரவு விதித்ததோடு, இனிமேல் எந்தவொரு கூட்டமும் தலைவரின் ஆலோசனையில்லாமல் நடைபெறக்கூடாதெனவும் தடையுத்தரவு பிறப்பித்து தீர்மானித்தார்.

BRIGHTMAN
நாவலர் வீதி - யாழ்நகர்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
புதிய பிரிவு BY:BRITTO
ஆரம்பம்:20.12.2003 Sat 1.30 p.m.
(25994)

ஆசிரியர் போட்டிப் பரீட்சை
த.தவசேகர் B.Sc.
பிரிவு I சனி ,ஞாயிறு 10-12
பிரிவு II சனி, ஞாயிறு 2-4
டானியல் ஞாபகார்த்த கல்வி நிலையம்(வெலிங்டன் சந்தி)
(26000)

ஆசிரியர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்
த.தவசேகர் B.Sc.
★ பரீட்சைக்கான முக்கிய விடயங்களை உள்ளடக்கி 25.12.03 இல் வெளிவருகின்றது.
(25999)

கணக்கீடு
A/L 2005
திரு.பாலவாசன் B.B.A. (F.M.Spl)
கட்டுப்பாட்டுக் கணக்கு
Sat., Sun. - 9-10 a.m.
ஆரம்பம்:20.12.03 - SAT - 9 a.m
(சி-32071)
வின்னா கல்வி நிறுவனம்

ஈசன் கல்வி நிலையம்
ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு
திரு.தவசேகர (B.Sc.)
MON முதல் FRI வரை 7.00 a.m. (19.12.2003)
(25972)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்.நகர்
புதிய பிரிவுகள் ஆரம்பம் (சிங்களம்)
(25926)
பிரிவு 1 20.12.2003 SAT 9.00 a.m.
பிரிவு 2 20.12.2003 SAT 4.30 p.m.
BY.லீலாக்கிருஸ்ணன்

தரம் 5 புலமைப் பரிசில் வகுப்பு- 2004
தென்மராட்சி மாணவர்களின் நன்மை கருதி சாவகச்சேரி நகரில் ஆரம்பமாகின்றது.........
அனுபவம் வாய்ந்த முன்னணி ஆசிரியர்
திரு.வே.அன்பழகன் அவர்கள்
இடம்: "வளர்மதி கல்வி நிலையம்"
(பழைய பொலீஸ் நிலைய அருகில், புதிய பிரதேச செயலக அருகில்)
கண்டி வீதி. சாவகச்சேரி.
ஆரம்பம்: 29.12.2003 திங்கள் பி.ப 3.00மணிக்கு
அனுமதிகளை 18.12.2003 இலிருந்து பெற்று முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
குறிப்பு: மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அனுமதிக்கு முந்துங்கள்.
(32086) "இயக்குநர்"

பதவி வெற்றிடங்கள
★Instructor (MS Office,DTP)
★Hardware Technician
★Instructor (VB,C++ and etc.)
இத்துறையில் குறைந்தது 6 மாத கால அனுபவம் தேவை.
தபால் மூலம் தொடர்புகொள்ளவும்.
No.1, Vengadeswara Road, Jaffna.
(சி-32074)

வடக்கில் சூரியன் உதயம் என்றுமே யாழில்!
இனி என்றென்றும்
பொருளியல் திரு.K.உதயன் B.B.A. (Hons)
A/L 2006, 2005, 2004 Day அனைத்துப் பிரிவுகளுக்குமான வகுப்புகள்
ஆரம்பம்: 03.01.2004 இல்
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறவும்.
அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.
(25601)
வின்னா கல்வி நிறுவனம்

விற்பனையாகின்றது
ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல
ஆக்கியோன்:திரு.P.உமாசங்கர் B.Com.Spl.Tr d.com
சகல புத்தகசாலைகளிலும்
வழிகாட்டல் வகுப்புக்கள்
சனி, ஞாயிறு.1.00 P.M
நல்லூர் சயன்ஸ் அக்கடமி.
(25998)

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை ஐயாத்துரை (துரைசிங்கம்)

யாழ்ப்பாணம், அரியாலை A.V றோட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ஐயாத்துரை நேற்று (17.12.2003) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இலங்கை K.K.S. சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் சிறாப்பராக் கடமையாற்றியவராவார். இவர் யோகம்மாவின் அன்புக் கணவரும் அன்னலக்ஷ்சி, பரஞ்சோதி(சேதா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுதர்சன் (சுவிஸ்), அஜந்தா (லண்டன்), அபிதா(சுவிஸ்), நிதிரஞ்சன்( லண்டன்) ஆகியோரின் தந்தையும் ருமணதாஸ், கேசவராஜா, உதயகுமார், சசிகலா, பாமினி, விஜயதர்சினி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

(26005) (16-36-17)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.